விலை ரூபா 1-25

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 28 மாசி 13 ஜ. ஆதி 15 இதழ் 15
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 25-2-1986

UNIVERSITY OF JAFFNA
25-2-1986
PERIODICALS SECTION

# தி. மு. க. முன்னணியில்!

[சென்னை]

தமிழ்நாடு உள்ளூராட்சித் தேர்தலில் நகராட்சித் தலைவர் தெரிவில் திராவிட முன்னேற்றக் கழகம் முன்னணியில் நிற்கிறது.

29 இடங்களைக் கைப்பற்றி தி. மு. க. முன்னணியில் நிற்கும் அதேவேளையில் 13 இடங்களை அ. தி. மு. க.-இ. காங்கிரஸ் கூட்டும், இரண்டு இடங்களை சுயேட்சை வேட்பாளர்களும் வென்றிருக்கின்றனர்.

மொத்தம் 13,500 உள்ளூராட்சி மன்றங்கட்கான வாக்களிப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. போட்டியிடுவோர் தொகை ஒரு லட்சத்துக்கும் அதிகமாகும். [ச]

# மார்க்கோஸ் சகாப்தம் சரிகிறது

# அக்கினோ ராணுவ உதவியுடன் ஜனாதிபதியாகிறார்

(மணிலா)

**பிலிப்பைன்ஸில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு, அரச தொலைக்காட்சி நிலையம் திருமதி அக்கினோ ஆதரவுப்படையினரின்கைக்கு மாறி இருக்கும் அதே நேரத்தில், பெருமளவு படைவீரர்களின் ஆதரவுடன் திருமதி அக்கினோ பிலிப்பைன்ஸின் புதிய ஜனாதிபதியாக அவரின் படைவீரர்களினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளார் என்றும், திரு. மார்க்கோஸின் சகாப்தம் அஸ்தமித்தது என்றும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. நிலைமை இவ்வாறிருந்த போதிலும் இச் செய்தி அச்சுக்குப் போகும்வரை சரியான தகவல்கள் வெளியாகவில்லை.**

ஜனாதிபதி மார்க்கோஸ் நாடுமுழுவதிலும் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துள்ள அதேவேளையில். அவரது மைத்துனரும் இராணுவபீடத் துணைத் தலைவருமான திரு. ஃபிடல் றமோஸின் தலைமையிலான கிளர்ச்சி ஆயுதப்படை அரசாங்க தொலைக்காட்சிநிலையத்தைக் கைப்பற்றியுள்ளது.

கைப்பற்றப்பட்ட தொலைக்காட்சி நிலையம் வாயிலாக ஜெனரல் றமோஸ் விடுத்த செய்தியில்:

தாம் தகவல் அமைச்சர் கிரிகோரியோ சென்ட்டானுவைக் கைதுசெய்துள்ளதாகவும், 2,50,000 வீரர்களைக்கொண்ட இராணுவமும் அதிரடிப் படையும் மார்க்கோஸ்-எதிர்ப்புக் கிளர்ச்சிப்படைகளுக்கு ஆதரவாகச் சேர்ந்துள்ளதாகவும், மார்க்கோஸின் படைகளுக்கு எதிராக வில்லாமோ விமானத்தளத்தில் கடும் சண்டை நடைபெற்றுவருவதாகவும் கூறினார்.

இதேவேளை, பிலிப்பைன்ஸி

[5-ம் பக்கம் பார்க்க]

# குண்டுவெடித்துச்சிதறியதில் 10பேர் காயம்!

(வல்வெட்டித்துறை)

திருவில் என்னுமிடத்தில் உள்ள ஒரு வீட்டின் முற்றத்தில் 'ஷெல்' குண்டு விழுந்து வெடித்துச் சிதறியதால் ஐவர் படுகாயமுற்றனர்: ஒரு வயோதி மாதும், ஒரு பெண் குழந்

[5ம் பக்கம் பார்க்க]

## மட்டு. பிரஜைகள்குழு அரசாங்க விசாரணையை பகிஷ்கரிக்குமா?

## நடுநிலையானவிசாரணையை கோருகிறது

(கொழும்பு)

கடந்தவாரம் அச்சுரைப்பற்றிலுள்ள லகுகலயில் நடைபெற்ற படுகொலைச்சம்பவங்களைப்பற்றி விசாரிக்கவென அரசாங்கத்தினால் நியமிக்கப்படும் குழுவைத் தாங்கள் பகிஷ்கரிப்பதுபற்றி மட்டக்களப்புப் பிரஜைகள்குழு ஆலோசிக்கவுள்ளது.

இச்சம்பவத்தைப்பற்றி விசாரிக்கவென ஓய்வுபெற்ற உயர் நீதிமன்ற நீதிபதியைத் தலைவராகக்கொண்ட ஒரு நடுநிலையான ஆணைக்குழுவை நியமிக்கும்படி ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனவைக் கோரவிருக்கும் பிரஜைகள் குழுவினர், தற்போதைய குழுவின மீதான அவநம்பிக்கைக்குப் பின்வரும் காரணங்களைத் தெரியப்படுத்தியுள்ள

[5 ம் பக்கம் பார்க்க]

# லகுகல சம்பவங்களைவிசாரிக்க விசாரணைக்கமிஷன் நியமனம்!

[கொழும்பு]

அம்பாறை லகுகலவில் சட்ந்த 19ம் திகதி நடந்த சம்பவம் பற்றி விசாரணைசெய்ய மூன்று அங்கத்தவர்களைக் கொண்ட குழுவொன்றை அரசாங்கம் நியமித்துள்ளது.

இராணுவ பிரிகேடியர் ஜோர்ஜ் பெர்னண்டோ, கடற்படைக் கொமடோர் ஆனந்த டி சில்வா, ஆகாயப் படைக் கொமடோர் டேறி குணவர்த்தன ஆகிய மூவருமே இக்குழுவில் நியமிக்கப்பட்டவர்களாவர்.

''இச்சம்பவத்தில் தீவிரவாதிகள் 5 முஸ்லிம்கணிச் சொந்தக்காரர்களைப் படுகொலைசெய்தனர். இவர்களின் பெயர்கள்: அப்துல் லத்தீப், மன்சூர், இஸ்மாயில், வெள்ளைத்தம்பி, சுரந்தர். இவர்களின் சடலங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படவில்லை அறுவடையின்போது பலவந்த

(5ம் பக்கம் பார்க்க)

# ருக்மணி அருண்டேல் அமரத்துவம் பெற்றார்

[புதுடில்லி]

''மகத்தான கலை வித்தகர் ஒருவரை, அறநெறிக் காப்பாளரை இந்தியா இழந்துவிட்டது'' என்று திருமதி ருக்மணி அருண்டேல் (82 வயது) மறைவு குறித்து இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி விடுத்த அஞ்சலியில் தெரிவித்துள்ளார்.

பிரபல கலா மேதையும் இசை, நடன, நாடகத்துறைக்குப் புத்துயிரூட்டியவருமான திருமதி ருக்மணி அருண்டேல் நேற்று அதிகாலை காலமானார். இவர் மாபெரும் சமூகத் தொண்டரும், இந்திய பிரம்ம ஞானச் சங்கத்தின் தலைவருமாவார் என்பது குறிப்பிடத்

(5 ம் பக்கம் பார்க்க)

# "ஆயுத பலமூலம் இனப்பிரச்னையை தீர்க்கமுடியாது!" வவனியா 2-வது தளபதி கருத்து

(வவனியா)

'ஆயுதபலம்மூலம் எமது நாட்டு இனப்பிரச்னையைத் தீர்க்க முடியாது, இருந்தும் அரச ஊழியராக இருப்பதால் எனது கடமையைச் செய்ய வேண்டியிருக்கிறது.'

வவனியா மாவட்ட ஆயுதப் படைகளின் 2-வது தளபதி கேர்ணல் ரஞ்சித் சில்வா இவ்வாறு தெரிவித்துள்ளார்

வவனியாப் பகுதியிலுள்ள அகதிகளுக்கு புனர்வாழ்வு அளிப்பதற்கான ஆலோசனைக் கூட்டம் மூன்று முறிப்புப் பகுதியிலுள்ள சர்வோதய நிலையத்தில் நேற்று நடைபெற்றது

வவனியா அரசாங்க அதி

[5ம் பக்கம் பார்க்க]

# வர்த்தகர்களுக்கு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் பேசும் மக்கள் மீது ஆட்சியாளர் நடாத்தும் படுகொலைகளைக் கண்டித்து இம்மாதம் 27 ம் திகதி நடைபெறவிருக்கும் ஆர்ப்பாட்ட ஊர்வலத்துக்கு சகல வர்த்தகர்களும் ஆதரவு வழங்குமாறு யாழ் வர்த்தகர்கள் சங்கச் செயலாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அன்றைய தினம் சகலவர்த்தகர்களும் வியாபார நிலையங்களை முழுமையாக மூடி ஊர்வலத்தில் கலந்து கொள்ளும் படியும் அவர் கேட்டுள்ளார். (மா)

# நுகேகொட வாசி விசாரணையின்பின் விடுதலை

(யாழ்ப்பாணம்)

''சிங்களவர் எமது எதிரிகளல்லர். இதே போன்று எந்த இனத்தவரும் ஈழப் போராளிகளாகிய எமக்கு எதிரிகளல்ல. ஆயினும் தமிழ்ப் பகுதியில் உளவு பார்ப்பதற்காக ஸ்ரீலங்கா அரசினால் அனுப்பப்படும் எவரும் எமது கண்ணை விட்டுத் தப்பிவிட முடியாது பறங்கியரான இவர் அரசின் உளவாளி என்பதில் எதுவித சந்தேகமுமில்லை. ஆயினும் இவரின் சொந்த ஊருக்கு அனுப்பி வைக்கிறோம்.''

இவ்வாறு, தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) கடந்த 19 ம் திகதி யாழ். மணிக்கூட்டு வீதியில் உள்ள தனியார் கடை ஒன்றின் முன்பாக வைத்துக் கைது செய்த பறங்கிய இனத்தவர் ஒருவரை விடுதலைசெய்வது சம்பந்தமாக விடுத்துள்ளஅறிக்கையில் தெரிவித்துள்ளது. அந்த அறிக்கை

(5-ம் பக்கம் பார்க்க)

# விமானக் குண்டு வீச்சு: பிள்ளைகள் மனநிலை பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

தூவடிப் பகுதியில் நடந்த விமானக் குண்டுவீச்சினால் அப்பகுதியிலுள்ள சிறுவர்களும், வயோதிபர்களும் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டுச் சத்தத்தினால் குறிப்பிட்ட பகுதியில் பல குழந்தைகள் இன்னும் அதிர்ச்சியிலிருந்து மீளவில்லை. பல பிள்ளைகளின் மன நிலை பாதிக்கப்பட்டு பாடசாலைசெல்ல அச்சமடைந்துள்ளனர்.

[5ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரிவிளம்பரம்

## விற்பனைக்கு

திருநெல்வேலி விவசாயப் பாடசாலைக்கு மிக அருகில் இராஜேந்திரத்திற்குச் சொந்தமான 4பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு. விளம்பர இல: 942 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 942)

பூரண விளைத்திறனுடைய புதிய பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. பிள்ளையார் மெற்றல் வேக்ஸ், 257, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். [C 911]

FARMகோழி சாணப்பசளை விற்பனைக்குண்டு. தொடர்பு NO 12 எம்மோ லேன், சோனக தெரு, யாழ்ப்பாணம். C 924

86 ஸ்ரீ 5642 தொடர் இலக்கமுடைய Honda -MB-8 மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு; சந்திரன் மோட்டார் வேக்ஸ், வீரமாகாளி அம்மன் கோவில் அருகாமையில் நல்லூர், யாழ்ப்பாணம், அல்லது J. ஜகதீசன், 131/4 பருத்தித்துறை வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (C 938)

காரைநகர் கிராம சேவகர் கிழக்குப் பிரிவு சுப்பிரமணிய வித்தியாசாலைக்கு அருகிலுள்ள அருணாசலம் வீதியில் கிணற்றுடன் கூடிய நிலப்பரப்பு 7½ முழுமையாகவோ, அல்லது பகுதியாகவோ விற்பனைக்குண்டு மேலதிக விபரங்கட்கு கடிதமூலம் தொடர்புகொள்ளவும். S. Paramasivam, 2D, Defonseka Place, Colombo-4. (A290)

## காணவில்லை

அல்சேசன் 6 வயது பெண் நாய் நிறம் கறுப்பு. இளமஞ்சல் ஒரு காது மடிந்திருக்கும் கண்டவர்கள் கீழ்க் குறிப்பிட்டுள்ள விலாசத்திற்கு அறிவிக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். எம். ஏ. கனகரட்ணம், புதிய வீதி, ஆறுகால்மடம். (C-941)

## வட பிராந்திய போக்கு வரத்துச்சபை கோண்டாவில் சாலையில்

## பகிரங்க ஏல விற்பனை

வடபிராந்திய போக்குவரத்துச் சபையினால் கழிக்கப்பட்ட பலதரப்பட்ட உதிரிப்பாகங்களின் ஏல விற்பனை 1986-03-03 ஆந் திகதி திங்கட்கிழமை பகிரங்க ஏலத்தில் கோண்டாவில் சாலையில் காலை 09-00 மணி முதல் விற்பனை செய்யப்படும்.

ஏல விற்பனைக்குரிய பொருட்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் 1986ம் ஆண்டு மாசி 26ஆந் திகதி முதல் பங்குனி 1ஆம் திகதி வரை அலுவலக நேரங்களில் யாழ். சாலை முகாமையாளருடன்தொடர்பு கொண்டு பார்வையிடலாம்.

சி. கனகரத்தினம்,
தலைவர் / தகவுடை அதிகாரி
வடபிராந்திய
போக்குவரத்துச் சபை,
பலாலி வீதி,
கோண்டாவில்.
(A 283)

---

## 31ம் நாள் நினைவஞ்சலி



**அமரர் மாணிக்கம் செல்வராசா**

தோற்றம்: 1932-08-07
மறைவு: 1986-01-26

பாசமுடன் எமை ஈன்று நேசமுடன் வளர்த்து ஈசனுடன் கலந்து விட்ட எம் தாயே!

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம்.

அன்பு கணவர்,
பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

கந்தப்பசேகரம் லேன்,
42/6, கே. கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

C 937

---

## ஈராண்டு நினைவஞ்சலி



**திருமதி ராஜலெட்சுமி தில்லைநாதன்**

மலர்வு: 07-03-1907
உதிர்வு: 25-02-1984

ஈராண்டு ஓடி மறைந்து விட்டபோதிலும் உங்கள் நினைவு எம் உள்ளங்களை விட்டகலவில்லை.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அன்புமக்கள்:
காலஞ்சென்ற ராஜநாதன்,
கனகநாதன்,
விஸ்வநாதன்,
தில்லைநாயகி,
மருமக்கள், பேரன்,
பேத்திமார், உற்றார்,
உறவின .

''பத்மாசனம்''
மாரியம்மன் ஒழுங்கை,
திருநெல்வேலி.

C 929

---

## 1-வது ஆண்டு நினைவஞ்சலி



**சுந்தரம்பிள்ளை சபாரத்தினம்**

(இளைப்பாறிய தலைமைக் களஞ்சியப் பொறுப்பாளர் டெல்மெஜ் போசைத் அன்ட் கம்பனி லிமிட்டெட் கொழும்பு)

மலர்வு: 20 07-1915
உதிர்வு: 07-03-1985
திதி: 25-02-1986

எங்கள் குடும்பத்தில் ஒளிவிளக்காகத் திகழ்ந்து காலமெல்லாம் எங்களைக் கண்ணின் இமைபோல் காத்தருளிய அன்புத் தெய்வமே ஓர் ஆண்டு நிறைவுபெறும்இந்நாளில் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.


மனைவி,
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள்.

சூராவத்தை,
சுன்னாகம்.

C 939

---

## நான்காவது ஆண்டு நினைவு அஞ்சலி



**கந்தையா மதியாபரணம்**
(மதி)
[இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்]

மலர்வு: 20-03-1951
உதிர்வு: 25-02-1982

கலங்கரை விளக்காய்
எம் வாழ்வில் ஒளிர வந்த
தீபமே!
நீர் வழி தவறி போனது
ஏன்?
நீர் வாடி நின்று எம்மை
வாழ வைத்த சுடரே!
நீர் எங்கு சென்று
விட்டீர்?
எங்கு சென்ற போதிலும்
உம் நினைவுகள்
என்றும் எம் மனதினில்
நிலைத்திடும்

உம் ஆத்மா சாந்தியடையஇறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் வாடும்
பெற்றோர், சகோதரி,
சகோதரர்கள், மச்சான்,
மாமன்மார்கள், உற்றார்,
உறவினர்கள்.

இல: 28
ஆசீர்வாதப்பர் வீதி,
யாழ்ப்பாணம். A 279

---

## விண்ணப்ப அறிவித்தல்

யாழ்ப்பாணம்
மாவட்ட நீதிமன்றம்

மலாயா பென்னாங்கைச் சேர்ந்த இராஜரட்ணம் மகள் பவளாம்பிகாதேவி உடைய மரணசாசனமில்லா மரணச்சொத்து சம்பந்தமாக.

வழ. இல.
மரணச்சொத்து நியாயாதிக்கம் } 3950

இன்னும்

1977ம் ஆண்டு 20ம்இலக்க குடியியல் நடைமுறைக கோவையின் திருத்தச் சட்டத்தின் 554 [U] பிரிவின் கீழ் வெளிநாட்டு நிர்வாகத் தத்துவப்பத்திரத்தை அங்கீகரிப்பதற்கும், கீழ் இலச்சனை இடுவதற்குமான விடயம்,

இன்னும்

1983ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி பென்னாங்கிலுள்ள மலாயா மேல் நீதிமன்றத்தால் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக அளிக்கப்பட்ட நிர்வாக தத்துவப் பத்திரம்பெற்ற இராஜரட்ணம் விவேகானந்தாவின் அற்றோனித் தத்துவக்காரரான கநதசாமி குணபாலன் சங்குவேலி வடக்கு மானிப்பாய்.

— விண்ணப்பகாரர்

இத் திகதியிலிருந்து 14 நாட்களுக்குப் பின்பு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்திற்கு மேற்குறிப்பிட்ட பென்னாங் மலாயா வாசியான இராஜரட்ணம் மகள் பவளாம்பிகாதேவியின் மரணசாசனமில்லா மரணச்சொத்து நிர்வாகம் ஏற்கப்பட்டு 1983ம் ஆண்டு மே மாதம் 3ம் திகதி 78ம் இலக்கம்கொண்ட மரணச்சொத்து நிர்வாக தத்துவ பத்திரத்தை 1977-ம் ஆண்டு 20ம் இலக்க குடியியல் நடைமுறைக் கோவையின் திருத்தச்சட்டத்தின் 554 'U' பிரிவின் கீழ் இந் நீதிமன்றத்தின் இலச்சனையிடுவதற்கு ஓர் விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படுகின்றது என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1986ம் ஆண்டு மாசிமாதம் 10ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
கு. குலசிங்கம்
பதிவாளர்

வரைவு:
திருமதி லிங்கா துரைராஜா
விண்ணப்பதாரரின்
சட்டத்தரணி.

C 885

---

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாண மாவட்ட
நீதிமன்றத்தில்

நீர்வேலி அகிலேசர் வளவு கனகரட்ணம் பஞ்சாட்சரம் மகள் கெங்காதேவியின் மரணசாசனமில்லா மரணச்சொத்து விடயமாக

—மரணமடைந்தவர்

மரணச்சொத்துநியாய திக்கம்
வழக்கு இல:- 3947

தம்பு நமசிவாயம் பஞ்சாட்சரம் நீர்வேலி வடக்கு. நீர்வேலி.

—மனுதாரர்

எதிர்

1. க. பஞ்சாட்சரம் மைகம் பெண் சரஸ்வதி
2. க. பஞ்சாட்சரம் மகள் ஜெயதேவி
3. க. பஞ்சாட்சரம் மகள் சத்தியதேவி
4. க. பஞ்சாட்சரம் இராஜயோகி
5. க. பஞ்சாட்சரம் மகள் சசிதேவி
6. க. பஞ்சாட்சரம் மகள் இரதிதேவி
7. க. பஞ்சாட்சரம் சிவயோகி எல்லோரும் அகிலேசர் வளவு, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

—எதிர்மனுதாரர்கள்

மேலே உள்ள இலக்கங் கொண்ட மரணசாதன நியாயாதிக்க வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்தவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக வேண்டி மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக் கட்டளை பதயப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறை உள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 04ஆம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதயப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றனதாக்கப்படலாகாது என்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

1986ம் ஆண்டு மாசி மாதம் 14ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

கு. குலசிங்கம்,
பதிவாளர்.

வரைவு:
லிங்கா துரைராஜா,
மனுதாரரின் சட்டத்தரணி.
(C 886)

---

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





| ராதா (மல்லி) | மோகன் |
|---|---|
| மலர்வு: 29-12-1963 | மலர்வு: 02-02-1968 |
| உதிர்வு: 25-02-1985 | உதிர்வு: 25-02-1985 |

(சகோதரர்கள்)

காங்கேசன்துறை A V R. மோட்டர்ஸ் ஸ்தாபனத்தில் நல்லமுறையில் 10 ஆண்டுகளுக்கு மேல் தொழில்புரிந்து சிறப்புடன் வாழ்ந்து அமரராகிய நண்பர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நண்பர்கள்.

காங்கேசன்துறை,
25-02-1986.

C-940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “பிலிப்பைன்ஸ் மக்களுக்கு எதிராக ராணுவ உதவிகள் பயன்பட்டால் அவை நிறுத்தப்படும்”

## அமெரிக்கா எச்சரிக்கை

(வாஷிங்டன்)
“பிலிப்பைன்ஸ் சுக்கான அமெரிக்க இராணுவ உதவிகள் அந்த நாட்டு மக்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்படுமேயானல் அந்த உதவிகள் அனைத்தும் உடன் நிறுத்தப்படும்” என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

## உலகச் செய்திகள்

பிலிப்பைன்ஸின் நிலைமை குறித்து ஆராயும் பொருட்டு அமெரிக்க தேசியபந்தோபஸ்து சபையை ஜனதிபதி றீகன் நேற்றுமுன்தினம் கூட்டினர்.

இதுவெவ்வாறு இருக்க, பிலிப்பைன்ஸில் ஜனதிபதி மார்க்கோஸுக்கு ஆதரவான துருப்புகள் நிலைகொண்டிருந்த முகாம்களைச் சுற்றி ஆயிரக் கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டம் செய்ததாகவும், அவர்களைக் கலைக்க துருப்புக்கள் கண்ணீர்க் குண்டுகளைப் பயன்படுத்தியதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை ஜனதிபதி மார்க்கோஸ் பிலிப்பைன்ஸ் தொலைக்காட்சியில் தோன்றி தாம் ராஜினமாச் செய்யப் போவதில்லையென்றும், திட்டமிட்டபடி பதவியேற்பு வைபவம் நடைபெறும் என்றும், இவ்வைபவத்திற்கு வெளிநாட்டு ராஜிய பிரமுகர்கள் அழைக்கப்படுவார்கள் என்றும் கூறினர். [பி]

## மகாராணி மீது முட்டை வீச்சு

(ராய்டர்)
பிரிட்டிஷ் மகாராணி இரண்டாவது எலிசபெத்துக்கு நியூஸிலாந்தில் முட்டை வீசப்பட்டது.

அவரை நோக்கி வீசப்பட்ட முட்டை ஒன்று அவரது டை’யில்பட்டு வழிந்தது. மற்றைய முட்டை கார் கண்ணுடியில் பட்டு உடைந்தது.

இச்சம்பவத்தை அடுத்து இரு இளம் பெண்களை சந்தேகத்தின் பேரில் பொலிஸார் கைது செய்துள்ளார்கள்.

மகாராணியை பார்வையிட வந்திருந்த 42,000 பாடசாலை மாணவர்கள் மத்தியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ய-பி)

## 15 பேர் பலி

(புதுடில்லி)
குஜராத் மாநிலத்தில் நிகழ்ந்த படகு விபத்தொன்றில் பதினைந்து பேர் பலியானுர்கள்.

பாடசாலை மாணவிகள் பன்னிரண்டுபேரும் ஆசிரியைகள் இருவரும் ஆசிரியர் ஒருவருமே இவ்விபத்தில் பலியானவர்களாவர்.

அனைவரது சடலங்களையும் தீயணைப்புப் படையினர் நேற்று முன்தினம் மீட்டனர்.

## பெட்டிகளுக்கிடையில் சிக்கி ரயில்வே ஊழியர் மரணம்

[யாழ்ப்பாணம்]
சுன்னுகம் ரயில் நிலையத்தில், இரு ரயில் பெட்டிகளுக்கிடையில் சிக்கியரயில்வேப் பகுதி ஊழியர் ஒருவர் பலியானுர்!

ரயில்வேப் பகுதி ஊழியரான மயில்வாகனம் கனகரத்தினம் [30 வயது] என்பவர் மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது.

யாழ் மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரணவிசாரணை நடத்தினர்.

இரு சரக்கு ரயில் பெட்டிகளை இணைக்கும் போது நடுவிலுள்ளவட்டவடிவமான ‘பவர் ஸாக்குல்’ நசுங்கிமரணமானுர் என்று தெரிவிக்கப்பட்டது. விசாரணையின் பின் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது. [க]

கிராமத்து ஆரம்பப்பாடசாலையொன்றிலிருந்து சுற்றுலா சென்றவர்களுக்கே இத்துயரம் ஏற்பட்டது [பி]

## ‘சலெஞ்சர்’ விபத்து: குழந்தைகள் மனநிலை பாதிப்பு

(லண்டன்)
அமெரிக்க விண்வெளி ஓடமான ‘சலெஞ்சர்’ வெடித்துச் சிதறியகாட்சியைப்பார்த்த தொலைக் காட்சி மூலம் த்த ஆயிரக் கணக்கான குழந்தைகளில் பலரது மனநிலை வெகுவாகப் பாதிப்புற்றிருப்பதாக அமெரிக்கசுகாதாரநிறுவனம் கவலை தெரிவித்துள்ளது.

அமெரிக்கா கனடா நாட்டிலுள்ள கோடிக்கணக்கான குழந்தைகள் ‘சலெஞ்சரில்’ பயணமான ரீக்சரை பார்ப்பதற்கும் அவர் விண்வெளியில் போதிக்க இருந்த பாடத்தைக் கேட்பதற்கும் வீட்டிலுள்ள ‘ரெலிவிஷன்களின் முன் அமர்ந்திருந்தனர்.

எழுபத்திரண்டு நிமிடங்களில் இவ்விபத்து நிகழ்ந்ததால் அவர்களது உற்சாகம் திடீரென பாதிக்கப்பட்டதுதான் குழந்தைகளைப் பாதித்துவிட்டதென அந்நிறுவன அறிக்கை தெரிவிக்கிறது. (கெ)

## இஸ்ரேலின் முயற்சி தோல்வி
# படைகள் வாபஸ்!

(ரெல் அவிவ்)
முஸ்லிம் கெரில்லாக்களால் கடத்தப்பட்ட தமது இரு வீரர்களையும் தேடிக்கணடு பிடிக்கும் முயற்சியில் இஸ்ரேல் தோல்வி கண்டு விட்டதாகக் கூறப்படுகிறது.

இதனைத்தொடர்ந்து தெற்கு லெபனுனின் சில பகுதிகளிலிருந்து தமது படைகளை இஸ்ரேல் வாபஸ் பெற்றுக் கொண்டு விட்டதாகவும் கூறப்படுகிறது.

லெபனுன் மக்கள் படைகள் இஸ்ரேல் துருப்புக்களுடன் மோதி கடும் எதிர்ப்புக் காட்டியதனுல் இஸ்ரேல் புறமுதுகு காட்டவேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டதாக இது குறித்து அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன. (ரா)

## ஈரான் – ஈராக் யுத்தம்:
# முடிவுக்கு கொண்டுவர தீவிர முயற்சி!

(தெஹ்ரான்)
ஈரான் - ஈராக் ஆகிய இரு நாடுகளுக்குமிடையில் புதிதாக தோன்றியுள்ள சண்டையை நிறுத்துவதற்கு மேற் கொள்ளப்பட்டுவரும் ராஜ்ய முயற்சிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த முயற்சியின் அடிப்படையில் சவூதி அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் இளவரசர் சவூத் அல் அய்சல் டமாஸ்கஸ் விரைந்துள்ளார். ஈரானிடம் தமக்குள்ள செல்வாக்கைசிரியா அதிபர் அயாத் பயன்படுத்தி சண்டையை நிறுத்த வழி வகுக்குமாறு இளவரசர் அல் அய்சல் சிரிய அதிபரைக் கேட்டுக்கொள்வார் என்று கூறப்படுகிறது.

அரேபியாவின் வெளியுறவு அமைச்சர் ஒரே வாரத்தில் இரண்டாவது முறையாக ஈராக் சென்றுள்ளதுடன், சமீபத்தில் ஈராக் அதிபரை சந்திக்க பக்தாத் சென்றிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

வளைகுடா போரில் ஈரானை ஆதரிக்கும் ஒரே ஒரு அரபு நாடு சிரியாதான் என்பதால், அது ஈரானை போர் நிறுத்தத்திற்கு இணங்க செய்ய முடியும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ரா)

## இனப்பிரச்னை: பஹத் கருத்து!

[புதுடில்லி]
“இலங்கை இனப்பிரச்னைக்கு இராணுவத் தீர்வு காண இயலாது” என்று இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. பஹத் மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய - பாகிஸ்தானிய வெளியுறவு அமைச்சர்களின் சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டதுகுறித்து பட்னுவில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே திரு. பஹத் இலங்கை இனப்பிரச்னை குறித்து மேற்படி கருத்தை வெளியிட்டார். [பி]

## மலையக வன்செயல்கள்:
# சந்தேக நபர்களைத் தேடும் பணியில் பொலிசார்

(கொழும்பு)
மலையகத்தில் இடம்பெற்ற வன்செயல்கள் சம்பந்தமாக சந்தேக நபர்களை பொலிஸார் கடந்த ஞாயிறு முதல் கைது செய்து வருகிருர்கள்.

வட்டகொட என்னுமிடத்தில் உதவி நிர்வாகி ஒருவர் உட்பட பதினறு பேர் கைதாகியுள்ளார்கள்.

பொலிஸ் மா அதிபர் சிறில் ஹேரத் விடுத்த உத்தரவையடுத்தே மேற்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நுவரெலியா மாவட்டத்தில் இடம்பெற்ற நானூற்றி எழுபத்தைந்து சம்பவங்கள் குறித்து விபரம் திரட்டப்பட்டுள்ளது.

தலவாக்கொல்ல, ஹட்டன், நோர்வூட், லிண்டுல, பூண்டு லோயா, கினிகெத்தன, மஸ்கேலியா, பொகவந்தலாவ, அக்கரபத்தன, நுவரெலியா ஆகிய இடங்களில் ஏற்கனவே சந்தேக நபர்களைத் தேடும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. (ய - பி)

## வர்த்தகர்சங்கம் விழிப்புக்குழு கலைக்கப்பட்டது!

[புலோலி]
பருத்தித்துறை வர்த்தகர் சங்கமும், பருத்தித்துறை விழிப்புக்குழுவும் கலைக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை வர்த்தகர் சங்கத்தினதும் விழிப்புக்குழுவினதும் தலைவர் அறிவித்துள்ளார்.

பருத்தித்துறை நகர் வழமைக்குத் திரும்பாதபடியினுலேயே வர்த்தகர் சங்கமும் விழிப்புக் குழுவும் கலைக்கப் பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## அநுராதபுரத்தில் அகதிகள் கிராம வாசிகள் மோதல்

(கொழும்பு)
அநுராதபுரம் சேனப்பு அகதி முகாமிலுள்ள சிங்கள அகதிகளுக்கும், அப்பகுதி கிராம வாசிகளுக்கு மிடையே இரு நாட்களாக பலத்த மோதல்கள் நிகழ்ந்துள்ளன.

மோதல்களின் போது முகாம் அகதிகள், கிராமவாசிகளுக்குச் சொந்தமான ஒரு கடையை முற்ருக சேதப் படுத்தியுள்ளார்கள்.

சேனப்பு அகதி முகாமில் சுமார் இரண்டாயிரம் சிங்கள அகதிகள் தங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. (ய - பி)

## ஆசிரியர்களுக்கான பரீட்சை

(மானிப்பாய்)
பெருந் தோட்டத்துறைக்கு எதிர் காலத்தில் ஆசிரியர்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை எதிர்வரும் மார்ச் முதலாந் திகதி நடைபெறவிருக்கிறது

இதற்கான அழைப்பு பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைத் திணைக்களத்தினுல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எண்கணிதம், தமிழ்மொழி பொது அறிவு ஆகிய மூன்று பாடங்களில் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

இப் பரீட்சை கண்டி, நுவரேலியா பண்டாரவளை, ஹட்டன் ஆகிய இடங்களிலேயே நடைபெறவிருப்பதால் வெளியிலிருந்து குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலிருந்து தோற்றவிருக்கும் பரீட்சார்த்திகள் தற்போதைய சூழ்நிலையில் பல சிரமங்களை எதிர் நோக்க வேண்டியுள்ளதாக இந்த இடங்களைச் சேர்ந்த பரீட்சார்த்திகள் கருத்து வெளியிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்திலிருந்தும் பலர் இப் பரீட்சைக்கு தோற்ற அழைக்கப் பட்டுள்ளார்கள்.

## வயாவிளான் பிரஜைகள் குழு

[யாழ்ப்பாணம்]
பலாலி இராணுவ முகாமுக்கு அண்மித்த கிராமமான வயாவிளான் மக்களின் வேண்டுகோளுக்கிணங்க இப் பகுதிக்கான பிரஜைகள் குழு அண்மையில் தெரிவு செய்யப் பட்டுள்ளது.

வயாவிளானைச் சுற்றியுள்ள பகுதிகளை உள்ளடக்கிய இப் பிரஜைகள் குழுவின் தலைவராக பத்திரிகையாளர் திரு. ஆ. சிறீ நடராசா தலைவராக ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டார் உப தலைவர் திரு. ஸ்தியாம்பிள்ளை சிங்கராசா, செயலாளர் திரு. கணபதிப்பிள்ளை முத்தையா, பொருளாளர் திரு. செ. சின்னத்துரை.

நிர்வாக உறுப்பினர்களாக திருவாளர்கள் சித்தர் கதிரவேலு, சாமிநாதர் சபாநாயகம், வல்லி கணேசன், கந்தையா தருமதுரை, சின்னத்தம்பி சிவஞானம். ஆகியோரும் தெரிவு செய்யப் பட்டனர். (ஜ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

பழிவாங்குவது ஆரம்பத்தில் இனிக்கும்; சிறிது போதில் கசப்பாக மாறும்; இறுதியில் எய்த வனையே திரும்பிவந்து சேரும். — மில்ற்றன்.

## நமது நோக்கு

# பிலிப்பைன்ஸ் பிரச்னை

தம்மைவிட வேறெவரும் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக முடியாதென்று, நாட்டை இருபது வருடம் கெடுத்து வந்த ஜனாதிபதி மார்க்கொஸ் இம்மாதம் 7ம் திகதி நடத்திமுடித்த தேர்தலில் எவ்வாறு நடந்துகொண்டாரென்பதை அகிலஉலகும் அறியும்.

தேர்தல் ஆரம்பமாக முன்னரும், நடக்கும்வேளையிலும், ஒருவாரம் இழுபறிப்பட்டு வாக்குகள் எண்ணப்பட்டபோதும் தம்முடன் போட்டியிட்ட திருமதி அக்குவினேவை 15 லட்சம் மேலதிக வாக்குகளால் தோற்கடிப்பதாக ஹேஷ்யம் கூறிவந்தார்.

அது எவ்வாறு முடியுமென்று அதிசயப்பட்டவர்கள் நடுநிலைமைவகித்து தேர்தல் பற்றிய அறிக்கைகளை சமர்ப்பித்தபோது அதில் எதுவித அதிசயமும் இல்லையென்ற முடிவைக் கண்டனர்.

ஒரு தேர்தலில் நடக்கக்கூடிய ஒழுங்கீனங்களும் வன்செயல்களும் திரு. மார்க்கொஸ்பக்கத்திலேயே நடைபெற்றன என்ற முடிவு அந்த நாட்டிலும் அதனை பேணி வளர்த்து வரும் அமெரிக்காவிலும் வெளியிடப்பட்டது.

போட்டியிட்ட திருமதி அக்குவினோ அவர்களே உண்மையில் வெற்றிபெற்றவரென்ற முடிவை பொது மக்கள் மட்டுமல்ல, அவர்களின் ஆன்மீகத் தலைவர்களும், கத்தோலிக்க ஆயர் குலமும் ஆதரிக்கின்றன.

இவ்வித மோசடி நடைபெறும் என்று ஏற்சனவே உணர்ந்த ஜனாதிபதி றீகன், மார்க்கொஸ் கட்டுப்பாட்டில் உள்ள ஆட்சிமன்றத்தின் பகிரங்கமுடிவை ஏற்கத் தயங்கினதால் ஒரு விசேட தூதுவரை அனுப்பி வைத்தார்.

பிலிப்பைன்ஸ் அமெரிக்காவின் ராணுவ தளங்கள் கொண்ட நாடு - பசிபிக் பிராந்தியத்தில் அமெரிக்காவின் கேந்திர ஸ்தானம். எனவே ஆட்சிமாற்றம் அவலத்தை ஏற்படுத்தும் என்ற அச்சம் ஜனாதிபதி றீகனுக்கு இருந்து வந்தது.

இன்று தேர்தல் முடிவு ஏற்படுத்தியிருக்கும் நெருக்கடி நாடளாவிய நிலையில் பெரும் எதிர்ப்பை உருவாக்கியுள்ளது. இந்தச் செய்தியையே றீகனின் விசேட தூதுவர் அவரிடம் தெரிவித்திருப்பது வெள்ளிடைமலை.

எதனையும் பொருட்படுத்தாது உலகின் பொதுஅபிப்பிராயத்தையும் உதறித் தள்ளி தாமே மூன்றும் முறையும் ஜனாதிபதி என்ற சத்தியப் பிரமாணத்தை இன்று எடுக்கத் தீர்மானித்திருக்கிறார்.

இப்பிரசுரம் வெளியாகும் போது அந்த நாட்டில் என்னென்ன நடக்கலாமென்று நாம் யூகிக்க முடியாதநிலை அங்குண்டு. எவ்வித எதிர்ப்பையும் தவிடு பொடியாக்க வல்ல அவசர காலச் சட்டம் அங்கு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது அது தன்னப்பம் தன்னைச்சுடுவது போல் தொழிற்படலாம்.

பாதுகாப்பு அமைச்சரும் இராணுவத்தின் பிரதித் தலைவரும் ராஜினமாச் செய்தனர். ராணுவத்தில் ஒருபகுதியும் இவர்களுடன் சேர்ந்து எதிர்ப்பியக்கத்தை ஆதரிக்கின்றன.

எவ்வித தயக்கம், அச்சமின்றி வெற்றி தமதே என்று வாதாடும் திருமதி அக்குவினோ, ஆட்சியாளர் நடத்திய கொலைகள் பற்றியும் பரவாய் பண்ணமல் மக்கள் எதிர்ப்பியக்கத்துக்கு தலைமை தாங்குகிறார்.

காலகதியில் ஆட்சிப் பொறுப்பு தம் கையில் வந்து விடுமென்று நம்புகிறார்.

அமெரிக்கா உட்பட வெளிநாட்டுத் தலைவர்கள் சிலர் இந்தக் குழப்பத்தில் வன்செயல் இடம்பெறுது ஒரு சுமுக தீர்வைக் காண வேண்டுமென்று கோருகின்றனர்.

உண்மையில் திருமதி அக்குவினோவுக்கு மக்கள் ஆதரவு என்பது தேர்தல் முடிவென்றால், சுமுகமான தீர்வு வேறென்ன?

இதனை அமெரிக்கா உறுதிசெய்ய உதவினல் தான் வளர்த்த கிடாயை தானே பலிகொடுப்பதற்குச் சமமென்று அஞ்சுகிறதா?

அமெரிக்காவின் நிதியுதவி ராணுவஉதவிபோன்றசெல்வாக்கை நம்பி, நாட்டைச் சூறையாடும் தலைவர்கள் எவரென்றாலும், தம்முடைய ஆட்சி ஜனநாயக ஆட்சியல்ல என்பதை மக்கள் உணருங் காலம் இருபது வருடம் சென்றாலும் வந்தே தீரும் என்பதை உணர்ந்தேயாகவேண்டும்.

இந்த எச்சரிக்கை பொதுவாக வல்லரசுகளின் தலையீடு உள்ள நாடுகள் அனைத்துக்கும் பொருந்தும்.

இன்று அமெரிக்கா தனது வெளி விவகாரங்களில் ஆதிக்கப்போட்டியை ஏற்படுத்துவதால் எங்கள் நாடும் மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டிய அவசியத்தை இன்றைய இருள் நிலையில் எடுத்தியம்புவது எமது பொறுப்பு.

மிலிட்டறியாசைவமா அல்லது இரண்டுமா என்ற விவாதம் முடிவடைவதற்கு ஈற்றில் மக்கள் உத்தரவாதம் அளிப்பார்கள்.

பாரதத்தின் கையில்

# ஈழத்தமிழரைக் காப்பாற்றும் பொறுப்பும் கடமையும்

['கல்கி' 16,பெப்ரவரி இதழில் இலங்கை நிலைமை குறித்து "நெடுமாறன் வெளியிட்ட அதிர்ச்சி தரும் தகவல்கள்" என்ற தலைப்பில் எழுதிப்பட்டுள்ளதலையங்கம் இது]

## கல்கி தலையங்கம்

காமராஜ் காங்கிரஸ் தலைவர் நெடுமாறன் இரு அதிர்ச்சி தரும் தகவல்களை வெளியிட்டிருக்கிறார். ஸ்ரீலங்கா ராணுவத்திற்குத் தேவையான கனரக ஊர்திகளை உற்பத்தி செய்து அளிக்க இந்தியமோட்டார்கள் தொழிலகம் ஒன்று ஆர்டர் பெற்றிருக்கிறது; இதற்கு நமது அரசு அனுமதி அளித்திருக்கிறது என்பது ஒன்று. மற்றொன்று, இந்தியத் தொழிலதிபர்களை ஸ்ரீ லங்காவில் முதலீடு செய்யுமாறு ஜெயவர்த்தன அழைத்திருக்கிறார்; இதையும் இந்திய அரசு ஏற்றுச் சம்மதம் தெரிவித்திருக்கிறது. - இவை உண்மையானல், நமது மத்திய அரசு பலத்த கண்டனத்துக்கு உரியதாகிறது.

இந்தியத் தொழிலதிபர்கள் ஈழத்தில் முதலீடு செய்தால் அங்கு நமக்கு ஒரு சுயநல நோக்கு உருவாகிவிடும் என்றும், பெரும்பாலும் வடஇந்தியத் தொழிலதிபர்களே ஸ்ரீ லங்காவில் முதலீடு செய்ய முன்வருவார்களாதலால் தமிழகத்துக்கும் வட மாநிலங்களுக்கும் இடையில் பிளவுஉண்டாகவே செய்யும் என்று சரியாகக் கணித்துப் பேசியுள்ளார் நெடுமாறன்.

தமிழர் ஐக்கியவிடுதலை முன்னணியின் திட்டத்தை நிராகரித்துவிட்ட ஜெயவர்த்தன பேச்சு வார்த்தை, சமரசம் ஆகியவற்றில் தமக்கு நம்பிக்கை இல்லை என்பதை வெட்ட வெளிச்சமாக்கியிருக்கிறார் பேச்சுவார்த்தைகளுக்கு ஈழப் போராளிகளின் போக்கு அனுசரணையாக இல்லை என்றாலும், அமிர்தலிங்கம் கட்சி நல்ல விதமாக ஒத்துழைப்பு அளித்து வந்தது. இப்போது அதன் யோசனைகளும் ஜெயவர்த்தனவால் நிராகரிக்கப்பட்டுவிட்டன. அதுமட்டுமன்றி, 'பிரச்சனைக்கு ராணுவத்தீர்வு ஒன்றே சாத்தியம்' என்கிறரீதியில் கூறியதன் மூலம் சிங்கள வெறியர்களிடமும், ஸ்ரீலங்கா ராணுவத்தினரிடமும் தாம் கைப்பாவையாகிவிட்டிருப்பதையும் உணர்த்தியிருக்கிறார் ஜெயவர்த்தன அதேவார்த்தைகளைப் பாரத அரசு திரும்பிச் சொல்லுமானல் ஈழத்தின் கதி என்ன? ஜெயவர்த்தன யோசிக்க வேண்டும்.

நாளுக்குநாள்சிங்கள ராணுவத்தின் அக்கிரமங்கள் அதிகரித்து வருகின்றன. விடுதலைப் புலிகளை மட்டுமன்றி இதர அப்பாவித் தமிழர்களையும் கொடுமைப்படுத்தியும், கொன்று குவித்தும் வருகிறது ஸ்ரீலங்கா இராணுவம். மேலும் அதன் அத்துமீறிய செயல்கள் குறிப்பிட்ட பிரதேசங்களிலன்றி இதுவரை அமைதியாக வாழவிடப்பட்ட தமிழர்கள் வசிக்கும் பகுதிகளுக்கும் படிப்படியாகப் பரவி வருகிறது. மட்டக்களப்பு மாவட்டத்தில் சமீபத்தில் ஹிந்து கோவில்களிலும், கிறிஸ்தவ தேவாலயங்களிலும் கூட இராணுவத்தினர் புகுந்து அங்கு பிரார்த்தனை செய்துகொண்டிருந்தவர்களையும், மதகுருமார்களையும் அடித்து நொறுக்கியும், கைது செய்தும், கொன்று குவித்தும் இருக்கின்றனர். இவையெல்லாம் "ஹிட்லரின் நாஜிப் படை கூட இன்னும் சற்று மனிதாபிமானத்துடன் நடந்து கொண்டது" என்று எண்ணும்படி செய்கின்றன. இந்த வெறித்தனங்களைக் கட்டுப்படுத்தி நாகரிகஅரசு நடத்த ஜெயவர்த்தனவால் முடியவில்லை என்பது நிரூபணமாகி விட்டது.

இந்த நிலையில் ஈழத் தமிழர்களைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பும், கடமையும் பாரதத்திற்கு இருக்கிறது. பேச்சுவார்த்தைகள் மூலம் இதைச் சாதிக்கமுடியுமா என்பது இன்று பெரிய கேள்விக்குறியாகி விட்டது. பண்டாரியின் பயணத்தை ஒத்திப்போட்டது ஈழத்துக்குப் பாடம் புகட்டிவிட்டதாகாது. மாறாக, அதைத் தமது மற்றொரு வெற்றியாக எண்ணி ஜெயவர்த்தன திருப்திப் புன்னகை புரிந்து கொண்டிருப்பார். இராணுவ நடவடிக்கையை நமது பிரதமர் வெறுப்பாரேயானல் நெடுமாறன் கூறுவதுபோல் குறைந்த பட்சம் உலக நாடுகளின் பொருளாதார பகிஷ்காரத்துக்காவது இந்தியா முன்னின்று முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

## மக்கள் கருத்து

### யாழ் தேவியில் ஓர் அனுபவம்

15-02-86 அன்று கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ் தேவியில் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு 3ம் வகுப்பில் மூன்று பெட்டிகள் விசேஷமாக ஒதுக்கப்பட்டிருந்தன. எனவே அன்றைய யாழ்தேவியில் 3ம் வகுப்பில் மிகுதியாகவிருந்த இரு பெட்டிகளில், பயணத்திற்காக நின்ற பெரும்பாலானேர் பயணம் செய்ய முடியாது திரும்பிச் சென்றனர் இரு 3ம் வகுப்புப் பெட்டிகளிலும் (பெண்கள் குழந்தைகள் வயோதிபர்) இருக்க இடமின்றி வரிசையாக அடுக்கப் பட்டவர்களாகக் காணப்பட்டனர், இந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு நின்ற சிலர் பல்கலைக்கழக மாணவர்களை அணுகி, மற்றைய பெட்டிக்குள் இருக்கும் பெண்களை, அவர்களுக்காக ஒதுக்கப்பட்ட பெட்டிக்குள் நிற்பதற்கு இடமளிக்குமாறு கோரினர், அதைப் பல்கலைக்கழக மாணவர்கள் மறுத்து விட்டனர். இதைப் பார்த்த புகையிரதப் பாதுகாவலர்கள் "நாங்கள் அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட பெட்டியினுள் விட அனுமதிக்கின்றோம். ஆனல் உங்கள் மாணவர்கள்தான் விட மறுக்கிறார்கள். இதற்கே ஒற்றுமை இல்லாத நீங்கள் ஏன் ஈழம் கோருகிறீர்கள்" என வினவினர்கள். தாய்க்குலமும், சிறுவர்களும் நின்றபடியே பயணத்தைத்தொடர, மாணவர்கள் விடுதலைப் பாட்டுக்களைப் பாடிக்கொண்டு பயணத்தைத் தொடர்ந்தனர். மற்றைய பிரயாணிகளும், தமிழர் என்பதை உணராதவர்கள் எப்படி விடுதலைக்கு உதவுவார்கள்? என்று எனக்குப் புலப்படவில்லை.

கே. ஸ்ரீஸ்கந்தகுமார்,
நவாலி வீதி,
ஆனைக்கோட்டை.

அநுராதபுரத்திலுள்ள

# அரச நிறுவனங்களுக்கு பலத்த பாதுகாப்பு

[கொழும்பு]

அநுராதபுரத்திலுள்ள சகல அரச நிறுவனங்களுக்கும் பலத்த பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மேலதிக அரசாங்க அதிபர் திரு. டி. கே. தஸநாயக்க இது சம்பந்தப்பட்ட பணிப்புரையை வழங்கியுள்ளார்.

பிரதான கட்டிட[illegible]ள் குண்டுவைத்து தகர்க்கப்படவுள்ளதாகக் கிடைத்த தகவலைத்தொடர்ந்தே இந்த

(7-ம் பக்கம் பார்க்க)

## பழங்கிணற்றுப் பிள்ளையார்

ஓங்கார வடிவாகி யொளிர்கின்ற தெய்வம்
ஓதுமறை யாகமங்க ளுவந்தருளுந் தெய்வம்
நீங்காத பேரின்பம் நிறைவாய தெய்வம்
நீதியுயர் வாகநல னேடுமவர் தெய்வம்
ஆங்காரப் பேரிருளை யகற்றியருள் தெய்வம்
ஆதரவா யடியவர்த மகத்திலுறை தெய்வம்
பாங்காருந் தவஞானப் பதங்காட்டுந் தெய்வம்
பழங்கிணற்றுப் பிள்ளையா ரென்றவுயர் தெய்வம்

சிந்தனைக்கு மெட்டாத செம்மையொளிர் தெய்வம்
சீரொழுகு தேசுமலர் திருவாய தெய்வம்
வந்தனைகள் புரியுமவர் வாழ்வளிக்கு தெய்வம்
வாகாரும் வேழமுக வடிவான தெய்வம்
புந்திதனி லென்றுமுறை புகலாய தெய்வம்
புகலரிய மெய்ஞ்ஞானப் பொருப்பாய தெய்வம்
பந்தனைகள் நீக்கவருள் பாலிக்குந் தெய்வம்
பழங்கிணற்றுப் பிள்ளையா ரென்றவுயர் தெய்வம்

ச. தங்கமாமயிலோன்

★ திருநெல்வேலி பழங்கிணற்றுப் பிள்ளையார் கோவில் திருவிழா இப்போது நடைபெற்று வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெஹிவத்த தாக்குதல்: 'ஈரோஸ்' விளக்கம்

(யாழ்ப்பாணம்)

தெஹிவத்த பகுதியில் கடந்த 19-ம் திகதி இடம்பெற்ற அதிரடித் தாக்குதல்கள் மூன்று முறை நடைபெற்றதாகவும், அவற்றுள் இறுதியாக நிகழ்ந்த தாக்குதலை 'தமிழீழ விடுதலைப் புலிகள்' இயக்கமே மேற்கொண்டதாகவும் 'ஈழப் புரட்சி அமைப்பு' (ஈரோஸ்) விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இடம்பெற்ற தாக்குதல் குறித்து விடுதலைப் புலிகள் தமக்குக் கொடுத்த விபரத்தின்படி பல வாகனங்களில் சென்ற 25 இராணுவத்தினரும் 55 ஊர்காவல் படையினருமாக 80 பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (மா)

## நுகேகொட---

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

''இன்று தமிழர்களை அழித்தொழிக்க ஏற்பட்டுள்ளவர்கள் நாளை முஸ்லிம்களையும், அதன் பின்னர் பறங்கியரான எம்மையும் அழிக்கவே செய்வர். இது சாத்தியமானதே சிலர் உங்களுக்கும் நாளைக்கு இது தான் நடக்கும் என்று பறங்கியரான எம்மைப் பார்த்துக் கூறவே செய்கின்றனர்'' என்று கைது செய்யப்பட்ட நுகேகொடைவாசியான மேற்படி பறங்கியர் எமது விசாரணையின் போது கூறியுள்ளார்.

''இவர், தான் எதுவிதகாரணத்துக்காகவும் யாழ்ப்பாணம் வரவில்லை என்று பொய் கூறுகிருர். இத்துடன் தனது நண்பர் ஒருவர் யாழ்ப்பாணம் போவதற்கான புகையிரதச் சீட்டை இலவசமாக வழங்கினூர் என்றும் கூறுகிருர். ஆனல் இவரை நாம் விசாரணைசெய்த போது இவரிடம், எங்கும் செல்லக்கூடிய அடையாள அட்டை இருந்ததைக் கண்டெடுத்துள்ளோம். இதே அடையாள அட்டைகள், இந்தியாவில் உளவாளிகளெனச் சந்தேகித்து எம்மால் கைது செய்யப்பட்டவர்களிடமும் காணப்பட்டது. எமது விசாரணைகளின்போது இவர் மேலும் தெரிவித்ததாவது:-

''நான் கொழும்பிலிருந்த போது கற்பனை செய்தமாதிரி யாழ்ப்பாண மக்கள் காணப்படவில்லை. தீவிரவாத இளைஞர்களும் நல்ல பண்புடனும், மரியாதையுடனும் காணப்படுகின்றனர். வீரம் மிக்கவர்களாகக் காணப்படுகின்னர். மனிதாபிமான உணர்வு இங்கு மேலோங்கி நிற்கிறது. திறமைசாலிகளான இவர்களிடம் எவருமே தப்பித்துக்கொள்ள முடியாது'' என்ருர்.

''விசாரணைக்குட்பட்ட பறங்கியர் உண்மை நிலையைத் தெரிந்துவிட்டார் என்று நம்புகின்ருேம். அவரும் இந்த நாட்டில் உள்ள சிறுபான்மை இனங்களில் ஒருவராக இருக்கிருர். தமது இனமும் ஒரு நாளைக்கு அழிக்கப்படுமென்று நம்புகிருர். எனவே இவர் ஒரு அரச உளவாளியாக இருந்தபோதிலும், அவருக்குக் கூறவேண்டியவற்றையெல்லாம் விளக்கி, அவர் பார்க்க வேண்டியவற்றைக் காண்பித்த பின்னர் அவரை விடுதலைசெய்துள்ளோம். இதுபற்றி அவர் உரியவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்குத் தயாராகவுள்ளார்.'' (ஐ)

எம்பயர் திரையில்
10-30, 2-30, 6-30, 9-.5
செந்தில் - சங்கிலி முருகன்
மலர்களேநனைகின்றன

லிடோ சினிமா
10-30, 2-30, 4-45 6-30
தேங்காய், மூர்த்தி
தங்கவேலு, சோ, மனோரமா
நடித்த
உங்கள் வீட்டு கல்யாணம்

வெலிங்டன்
10-30, 2-30, 6-30
சிவகுமார்-ராதா-சுரேஷ்
நடித்த
ஆனந்த ராகம்
(புதிய பிரதி கலர்)

# முதலாவது டெஸ்ட் கிரிக்கெட்டில் பாகிஸ்தான் வீரர்களின் புதிய சாதனை!

## இலங்கை வீரரின் பந்துக்கு விக்கெட் இரண்டாக முறிந்தது

[சண்டி]

கண்டி அஸ்கிரிய விளையாட்டரங்கில், இலங்கை-பாகிஸ்தான் கோஷ்டிகளிடையே நடைபெறும் முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 2-ம் நாள் ஆட்டத்தில் நேற்று பாகிஸ்தான் துடுப்படி வீரர்களான மொடஷர்நஸாரும், சலீம்மாலீக்கும் சோடி சேர்ந்துஆடி 102 ஓட்டங்களை எடுத்து ஓர் புதிய சாதனையை ஏற்படுத்தினர்கள்.

58 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை இழந்த நிலையில் நேற்றைய ஆட்டத்தை தொடர்ந்த பாகிஸ்தான் கோஷ்டியின் மேற்படி இரு வீரர்களும் மதியபோசன இடைவேளைவரை தமது ஓட்டங்களின் எண்ணிக்கையை 123 ஆக உயர்த்திஞர்கள்.

மதியபோசன இடைவேளையின்பின் பாகிஸ்தான் கோஷ்டியின் விக்கெட்டுகள் அடுத்தடுத்து சரிந்தன. 154 ஓட்டங்களை பாகிஸ்தான் எடுத்த போது சலீம்மாலீக் 54 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அதன்பின் மொடஷர்நஸாரும் 81 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். இவர் 9 'பவுன்றிகளை' அடித்தது சிறப்பம்சமாகும். பாகிஸ்தான் கோஷ்டி 230 ஓட்டங்களைப் பெற்ற போது சகல விக்கெட்டுகளையும் இழந்து, 121 ஓட்டங்களால் இலங்கைக் கோஷ்டியை விட முன்னணியில் நிற்கின்றது.

இலங்கைக் கோஷ்டியின் கோஷ்டியின் வேகப்பந்து வீச்சாளர்களான அசந்த டி மெல் 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், ருமேஷ் ரட்ணயக்கா 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்திஞர்கள்.

இலங்கை கோஷ்டி 2-வது இன்னிங்ஸை ஆடமுற்பட்டதும், போதிய வெளிச்சமின்மையால், முதல் ஓவரில் மூன்று பந்துகளை வீசியதும் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது இலங்கைக் கோஷ்டியின் ஆரம்ப துடுப்படி வீரர்களான வெற்றிமுனி 3 ஓட்டங்களுடனும், ரவிரட்ணயக்கா 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது இருக்கிறார்கள்.

### விக்கெட் இரண்டானது!

நேற்றைய ஆட்டத்தின் ஒரு கட்டத்தில், இலங்கை வீரர் அசந்த டி மெல் வீசிய பந்தில் பாகிஸ்தான் வீரர் ஸல்கர் னெய்னி விக்கெட் வீழ்ந்த போது, அந்த விக்கெட் இரண்டு துண்டாக முறிந்தது. இதன்பின் புதிய விக்கெட் நாட்டப்பட்டு ஆட்டம் தொடங்கியது குறிப்பிடற்தக்கது

ஸ்கோர் விபரம்: பாகிஸ்தான்: 230, இலங்கை: 109, 7-0 3-ம் நாள் ஆட்டம் இன்று காலை 10 மணிக்கு ஆரம்பமாகும். [வி]

## திருவள்ளுவர் விழா

(யாழ்ப்பாணம்)

நவாலி மகா வித்தியாலயத்தில் திருவள்ளுவர் குருபூசைத் தினமான 26 ம் திகதி புதன் கிழமை காலை மகா வித்தியாலய அதிபர் திரு. ஏ. கதிர்காமத்தம்பியின் தலைமையில் திருவள்ளுவர் விழா நடைபெறவுள்ளது.

இந்துசமய வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். மகேசன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு திருக்குறள் மனனப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் பரிசு பெற்ற மாணவர்களுக்குப் பரிசில்களை வழங்கிச் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றுவார்.

ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலை அதிபர் திரு. அப்பச்சிமகாலிங்கம், ஆசிரியர் எஸ் தயாளன், கம்பன் கழகச் செயலாளர் திரு. யெஜராஜ், பண்டிதை சோம இராஜேந்திரம் ஆகியோர்சிறப்புச் சொற்பொழிவாற்றுவர்.

## மட்டு பிர...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

னர்.

''கொலையாளியே கொலையாளியை விசாரணை செய்வதா?''; ''கடந்த வருட ஆரம்பத்தில் மன்னரில் சுட்டுக் கொலைசெய்யப்பட்ட வண. மேரி பஸ்ரியனின் கொலையை விசாரிக்கவென ஒரு குழு நியமிக்கப்பட்டதாயினும் அதன் முடிவுகள் வெளியிடப்படவில்லை.'' ''கடந்த வருடம் ஜூன் மாதம் நடைபெற்ற வவனியா படுகொலைபற்றிய விசாரணை முடிவுகளும் இன்னமும் வெளியிடப்படவில்லை''

இன்று காலை லகுகலவுக்கு விஜயம்செய்யவிருக்கும் பிரஜைகள் குழுவினர் இப்படுகொலைகள் சம்பந்தமான முழு விடயங்களையும், சாட்சியங்களையும் பெறுவர். பின்னர் இவை அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு ஜனுதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தன, தேசிய பந்தோபஸ்து அமைச்சர் அத்துலத் முதலி, அமைச்சர் தேவநாயகம், செ. ராஜதுரை, திருமதி ரங்கநாயகி பத்மநாதன் ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளது. (ய-பிச)

## குண்டு...

[ம் பக்கத் தொடர்ச்சி]

தையும் அயல் வீட்டில் மேசன் வேலைசெய்துகொண்டிருந்த மற்றும் மூவரும் காயமடைந்துள்ளனர்.

இவர்கள் உடனடியாக வல்வை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டனர்.

தொண்டமானறு இராணுவ முகாமிலிருந்து சுமார் மூன்று மைல் தூரத்தைத் தாண்டி வந்து விழுந்த இக்குண்டின் துகள்கள் அவ்வீட்டின் சுவர்களைத் துளைத்துள்ளதாகவும் வீட்டிலுள்ளவர்கள் உட்பகுதியில் இருந்தபடிஞல் தெய்வாதீனமாக உயிர்ச்சேதமில்லாது தப்பித்துக்கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவத்தைத்தொடர்ந்து இப்பகுதியில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. தொண்டமானற்று கடல்பக்கமிருந்து தொடர்ச்சியாக பீரங்கியால் சுடும் சத்தமும் கேட்டவண்ணமிருக்கின்றது.

## விமானக்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

வயோதிபர்கள் குறிப்பாக இருதயநோயால் பாதிக்கப்பட்டிருப்பவர்கள் இக்குண்டுச் சத்தத்திஞல் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். விமானச் சத்தம் கேட்டாலே வெளியே வர முடியாத மனேநிலை இப்பகுதிப் பிள்ளைகளுக்கு ஏற்பட்டுள்ளது.

# ஆயுதபலமூலம் இனப் . . .

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பர் திரு. கே. சி லோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் சர்வோதய இயக்கத் தலைவர் திரு. ஏ. ரி. ஆரியரத்னவும், மற்றும் மேலதிக, உதவி அரசாங்க அதிபர்கள், விசேட சேவை அலுவலர்கள், கிராமிய சர்வோதயத் தொண்டர்கள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

சர்வோதய இயக்க வட பிராந்திய இயக்குநர் திரு. க. கதிரமலை இக்கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

நாட்டில் சாந்தியும் சமாதானமும் ஏற்படவேண்டுமென்று இக்கூட்ட ஆரம்பத்தில் பிரார்த்தனை செய்யப்பட்டது.

கேர்ணல் ரஞ்சித் சில்வா மேலும் பேசுகையில், 'வியட்னும், லாவோஸ், கம்பூச்சியா ஆகிய நாடுகளில் அமெரிக்காவின் ராணுவத் தலையீடு இருந்தும் பிரச்னைகளைத் தீர்க்க முடியவில்லை. அதிலிருந்தே ஆயுதபலத்திஞல் எதனையும் சாதிக்க முடியாது' என்று சுட்டிக் காட்டிஞர்.

'பொறுப்பு வாய்ந்த அதிகாரியாகிய நான் நன்கு யோசித்துப் பேசவேண்டிய நிலையிலுள்ளேன்' என்று தெரிவித்த கேர்ணல் ரஞ்சித் சில்வா வவனியாப் பகுதியிலுள்ள பெருந்தொகையான மக்கள் அகதிகளாக வெளியேறியுள்ளனர் என்றும் அதற்கு இராணுவத்தினர்மீது அவர்களுக்கேற்பட்டுள்ள பயமே காரணம் என்பது மறுக்க முடியாத உண்மை என்றும் சொன்ஞர். [மா]

## ருக்மணி---

1 ம் பக்கத் தொடர்ச்சி)

தக்கது.

அடையாறு பிரம்மஞான சங்கத்தின் பெசன்ட் நகரில் நேற்றுப் பிற்பகல் அவரது சடலம் தகனம் செய்யப்பட்டது.

1904ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 29ம் திகதி மதுரையில் பிறந்த இவர் இளம் வயதிலேயே பிரம்மஞானத்தால் கவரப்பட்டார்.

'பரதநாட்டியம்' என்ற நடனக்கலையை அறிமுகப்படுத்தியவரே திருமதி ருக்மணிதேவி தான்.

1935ம் ஆண்டு அடையாறில் பிரம்மஞான சங்கத்தின் வைர விழாவின்போது பலரின் முன்னிலையில், முதன்முதலாக பரதநாட்டிய விருந்தளித்தார்.

1936ம் ஆண்டு அவர் சர்வதேசக் கலை அக்கடமியை நிறுவிஞர். பின்னர் அது கலாக்ஷேத்திரா என்று பெயர் பெற்றது.

பரதநாட்டியக் கலையைப் பரப்புவதில் திருமதி ருக்மணி தேவி சர்வதேசப் புகழ் பெற்ருர். அதற்காக அவர் பல பாராட்டுக்களையும், நற்சான்றிதழ்களையும் பெற்ருர்.

திருமதி ருக்மணிக்கு விஸ்வ பாரதி பல்கலைக்கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கி சிறப்பித்தது. இவர் ராஜ்ய சபையின் உறுப்பினராகவும் பணியாற்றியிருக்கிருர்.

திருமதி ருக்மணிக்கு 'பத்ம பூஷண்' விருதும் வழங்கப்பட்டது.

''இந்தியப் பண்பாட்டின் சாஸ்திரிய நடனத்திற்கு புத்துயிர் ஊட்டிய இவரதுசேவை என்றென்றும்போற்றப்படும்'' என்று இந்திய ஜனுதிபதி ஸியானி ஜெயில் சிங் தமது இரங்கலுரையில் தெரிவித்தார்.

## மார்க்கோஸ்---

[1ம் பக்கத் தொடர்ச்சி]

லுள்ள அமெரிக்காவின் கிளாக் விமானத்தளத்திலுள்ள பிலிப்பைன்ஸ் பாதுகாப்புப்படையினரும் மார்க்கோஸை எதிர்க்கும் மக்கள் இயக்கத்துக்கு ஆதரவுதர முன்வந்துள்ளனர்

பிலிப்பைன்ஸ் பாராளுமன்றம் நேற்றிரவு நடத்த விருந்த விசேஷ கூட்டத்தில் திருமதி அக்கினே ஜனுதிபதியாகப் பதவிப்பிரமாணம்செய்வார் என்று எதிர்பார்க்கட்பட்டது

அரசாங்கத்துக்குச் சொந்தமான விமான நிறுவனத்தின் தலைவர் ரொமன் குறூஸ் தமது பதவியிலிருந்து ராஜினமாச் செய்ததையடுத்து. இந்த விமான நிறுவனம் இனிமேல் திருமதி அக்கினே தலைமையில் அமையும் புதிய அரசாங்கத்திடமிருந்தே கட்டளைகளை ஏற்றுச் செயற்படுமெனவும் சர்வதேச விமானச்சேவை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அறிவித்துள்ளது

திருமதி அக்கினே புதியஜனுதிபதியாகப் பிரகடனப்படுத்தப்படும் பட்சத்தில் திரு. மார்க்கோஸுக்கு தாம் புகலிடம் அளிக்கத் தயாராயுள்ளதாக ஸ்பெய்ன் வெளிநாட்டமைச்சர் பெர்னுண்டாளி ஒடானே மட்ரிட்டில் விடுத்த அறிக்கையொன்றில் கூறியுள்ளார்.

இதேநேரத்தில் திரு. மார்க்கோஸை அழைத்துச் செல்ல மணிலாவில் இரு அமெரிக்க விமானங்கள் தயார் நிலையில் இருப்பதாகப் பிந்திக்கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லகுகல...

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

மாக விவசாயிகளின் காணிகளைத் தீவிரவாதிகள் பொறுப்பேற்றுக் கொண்டமையால் விவசாயிகளைப் பாதுகாக்கச் சென்ற பாதுகாப்புப் படையினரைத் தீவிரவாதிகள் தாக்கினர் இதனையடுத்து 40மார்க்ஸிச தீவிரவாதிகள் கொல்லப்பட்டனர். இவர்கள் ஆயுதப் படையினரின் வருகையையடுத்துக் குழப்பமடைந்து தமது முகாம்களுக்குத் தப்பியோட முயற்சித்தபோது சூடுபட்டு இறந்தார்கள்'' என்று பாதுகாப்புவட்டாரங்கள் கூறுகின்றன.

இதனிடையே அரசு விடுத்துள்ள அறிக்கையொன்றில், இராணுவத் தளபதி நளின் செனவிரத்னவும், புலனுய்வு மற்றும் பாதுகாப்புப் பணியகத்தின் பணிப்பாளர் மெரிஸ் குணவர்த்தனவும் அம்பாறைக்குச் சென்றதாகவும், அவர்கள் சமர்ப்பித்துள்ள அறிக்கையின்படி மொறக்கந்த, பொகுன, பலத்தாத, புத்தமெஸ்ஸாவ, ஜெயராம் பலவ, தங்கவேலாயுதபுரம் ஆகிய இடங்களில் 'ஈரோஸ்' இயக்கத்தைச் சேர்ந்தவர்களின் முகாம்கள் இருந்தனவென்றும், இவர்கள் அங்கிருந்த விவசாயிகளை விரட்டிவிட்டு அவர்களின்காணிகளில் பயிர்ச்செய்கை செய்தனர்என்றும் தெரியவருகிறது.

''பத்துப் பெண்கள் கற்பழிக்கப்பட்டதாக வெளிநாட்டு நிறுவனங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதுபற்றி சாட்சியமளிக்க விரும்புவோர் அங்கு விசாரணைகளை மேற்கொண்டுவரும் அதிகாரிகளிடம் சாட்சியமளிக்கவேண்டும்'' எனக் குறிப்பிடப்பட்டிருக்கும் இவ்வறிக்கையில், லகுகல சம்பவங்கள் பற்றி வெளிநாட்டு செய்தி ஸ்தாபனங்களிடம் முறையிட்டிருக்கும் மட்டக்களப்புப் பிரஜைகள்குழுவினர் இதுபற்றி சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளிடம் முறையிடவில்லையெனவும், அவர்கள் மீது புலனுய்வு விசாரணைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விமானக்குண்டுவீச்சிலிருந்து பாதுகாப்பு வழிமுறைகள்

[விமானக் குண்டுத்தாக்குதலிலிருந்து மக்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்குச் சுலபமான வழிமுறைகள்பற்றி கடந்த மூன்று தினங்களாக வெளியிட்டு வந்த தொடர் கட்டுரைகளில் தெளிவாக விளங்கப்படுத்தியிருந்தோம். அதன் இறுதிப்பகுதி இன்று வெளிவாகிறது. இத்தொடர் கட்டுரை 'குண்டு வீச்சிலிருந்து பாதுகாப்பு' என்னும் நூலிலிருந்து தொகுக்கப் பட்டவையாகும்.]

## செய்முறை

எமக்குத் தேவையான பிரதேசத்திலும் சற்று கூடுதலான பகுதியில் இருந்து, மேற்படை மண்ணை புற்கள், இலைகளுடன் சேர்த்து அப்படியே தட்டுத்தட்டாக பெயர்த்து எடுக்க வேண்டும். சிறு செடிகள், புற்கள் பசுமையாக அதில் இருக்குமாயின், அதன் மேல் நீர் தெளிக்கப்பட்டு நிழலுள்ள பிரதேசத்தில் வைக்கப் பட வேண்டும். பின்பு அவ்விடத்தில் ஏழரை அடி அகலத்துக்கு 1 அடி ஆழமுள்ள கிடங்கொன்று வெட்டப்பட வேண்டும். பின் அதனுள் நடுவே ஆறரை அடி அகலத்தில் ஒன்றரை அடி ஆழமாக்கப்படல் வேண்டும். பின் மீண்டும் உள்ளே ஐந்தரை அடி அகலத்தில் 2 அடி ஆழத்திற்கு வெட்டப்பட வேண்டும். இது வரை வெட்டப்பட்டிருக்கும் பகுதியே கூரை அமைப்பதற்காக பயன்படப் போகும் பகுதியாகும். இனி தங்கியிருக்கும் பகுதிக்கான கிடங்கானது உள்ளே முன்னர் குறிப்பிட்டவாறு மேல் பகுதி நாலரை அடி அகலமானதாகவும், அடிப் பகுதி மூன்றரை அடி அகலமானதாகவும் இருக்கும் வண்ணம் 6 அடி ஆழத்திற்கு வெட்டப்பட வேண்டும்.

மண் அகழும் வேலை நடக்கும் போது மண் கண்டபடி சிதறுவண்ணம் ஓரிடத்தில் சேமிக்கப்பட வேண்டும். இப்போது தங்குவதற்குப் பயன்படும் அடிப் பகுதியானது தேவையாயின் ஓரங்களில் பலகைகளோ, கட்டைகளோ இறுக்கப்பட்டு பலப்படுத்தப் படலாம். அதன் பின் மேலே ஐந்தரை அடி அகலத்தில் உள்ள கிடங்கின் 2 அடி உயரமான பகுதி முழுவதையும் 6-8 அங்குல விட்டமுடைய மரக்குற்றிகளை ஒன்றன் மேல் ஒன்றாக மூன்று அடுக்குகளுக்கு குறையாமல் படத்தில் காட்டியவாறு இட்டு நிரப்பவேண்டும். இதற்கு உங்கள் பகுதிகளில் கிடைக்கும் வைரமான மரங்களை தெரிவு செய்து, அவை கறையான் அரிப்பதற்கு ஊடாகாமல் தடுப்பதற்காக சொலிக்கனம் (Solignum) இடப்பட வேண்டும், அது கிடைக்காவிடின் கழிவு எண்ணெய், தார் முதலியவை கூடப் பூசலாம். இப்போது மரக்கட்டைகளிலான கூரையின் பகுதி முடிவடைந்ததும் அதன் மேல் நீர், மண்என்பன அகழியினுள் செல்லாது தடுப்பதற்காக பொலித்தீன் அல்லது கன்வஸ் போன்றவை இடப்பட வேண்டும். பின்பு அதன்மேல் உள்ள ஒன்றரை அடி உயரமான ஆறரை அடி அகலக்கிடங்கானது முற்று முழுதாக மண் இட்டு நிரப்பப்படவேண்டும் மீண்டும் அதன் மேல் முன்னர் இட்டதைப்போன்ற நீர் புகவிடாத் தடுப்புஒன்று இடப்பட்டுஅதன் மேல் உள்ள 1 அடி உயரமுடைய ஏழரை அடி அகலக் கிடங்கானது சிறு பாறைகள், கற்கள் முதலியவற்றால் நிரப்பப்பட்டு சிறு படை மண் ஒன்றால் மூடப்படவேண்டும். இதன்மேல் ஏற்கனவே பெயர்த்தெடுத்து வைக்கப்பட்டிருந்த மேற்படை மண்ணானது முன்பிருந்தது போலவே புற்கள், செடிகளுடன் பதிக்கப் பட வேண்டும். இப்போது அகழ்ந்தெடுக்கப்பட்ட மண் யாதாயினும் வெளியே இருப்பின் அது கவனமாக தொலை தூரத்திற்கு அகற்றப்பட வேண்டும்.

இந்த மூடப்பட்ட அகழியின் உட் செல்லுவதற்குரிய பாதையினை ஏற்கனவே வெட்டப்பட்ட பகுதியிலேயே ஒரு கரையில் சிறுபகுதி மூடப் படாமல் விடுவதால் அமைக்கலாம். அல்லது இதனுடன் சேர்ந்தாற்போல் 3X3 அடி அளவினையுடைய ஒரு கிடங்கொன்று மேலிருந்து அடி வரை அமைக்கப்பட்டிருப்பின் கூட அதனுள் வைக்கப்பட்டிருக்கும் ஓர் ஏணியின் மூலம் உள்ளிறங்கக் கூடியதாக இருக்கும். அப்பாதையின் மேற்புறம் கூட சிறுதடிகள், புற்கள், இலைகள் கொண்டு கட்டப்பட்ட மூடி ஒன்றினால் மூடப்பட்டிருக்க வேண்டும். தேவையானபோது அதனைத் திறந்து உள்ளேசென்ற பின்னர் உள்ளிருந்தே அதனை மூடக்கூடியவாறு இருத்தல் வேண்டும்.

அகழியினது முழு வேலைகளும் முடிவடைந்த பின்னர் வெளியிலிருந்து பார்க்கும் பொழுது அங்கு அகழி இருப்பது முற்றிலும் தெரியாதவாறு அமைந்திருப்பின் அது மிகச் சிறப்பானதாகும். மேற்கூறியவாறு அகழியொன்றினை அமைப்பதற்கு மரக்கட்டைகளோ, கற்களோ கிடைக்காவிடின் கூட வெறுமனே மண் அல்லது மணலினால் கூட கூரை அமைக்கப்படலாம். சாதாரண இறுக்கமான மண்ணைப் பயன்படுத்துவீர்களேயாயின் குறைந்தது 5 அடி உயரமுடையதாகவும், நன்கு காய்ந்து இறுக்கமற்ற கடற்கரை மணலாயின் குறைந்தது 4 அடி உயரமாவது இருக்க வேண்டும். மண் நிரம்பிய சாக்குமூட்டைகளாயின் 5 அடி உயரமுடையதாகவும், மணல் நிரம்பிய சாக்குமூடைகளாயின் குறைந்தது மூன்றரை அடி உயரமானதாகவும், கூழாங்கற்கள் போன்ற 1 அங்குலத்திலும் குறைவான அளவுடைய சிறு கற்களால் நிரப்பப்பட்ட சாக்கு மூடைகளாயின் குறைந்தது இரண்டரை அடி உயரமானதாகவும் இருக்கக் கூடியவாறு நெருக்கி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கப்பட வேண்டும்.

இதுவரை குண்டுவீச்சு ஒன்று நிகழும்போதும், அதற்கு முன்பும் எவ்வகையில் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் எனக் கண்டீர்கள். இனி மீண்டும் மீண்டும் ஒரே பிரதேசம் ஒன்றில் குண்டு வீசப்படும் போது உங்களால் செய்யப்படும் ஒருசில நடவடிக்கைகள் பற்றிப் பார்ப்போம் இவற்றின் மூலம் நீங்கள் குண்டு வீசும் விமான ஓட்டியை ஏமாற்றி திசை திருப்பக்கூடியதாய் இருக்கலாம். அதாவது முக்கியமாக இரவில் குண்டு வீச்சு நிகழ்கின்றதாயின் உங்களது வீட்டிலுள்ள சகல விளக்குகளையும் அணைத்துவிட்டு தோட்டத்தில் அல்லது பக்கத்திலுள்ள திறந்தவெளிகள் போன்றவற்றில் சிறு விளக்குகளை எரியவைத்து விடுங்கள் இரவில் மேலிருந்து பார்க்கும் விமான ஓட்டி விளக்குகள் எரியும் இடங்களில்தான் குடிமனைகள் அதிகமாக இருக்கும்என்ற எண்ணத்தில் அவ்விடங்களை நோக்கியே குண்டுகளை வீசுவார். எனவே இதன்மூலம் உங்களது வீடுகள் காப்பாற்றப்படும் சாத்தியம் நிறைய உண்டு ஒருமுறை குண்டு போடப்பட்டபின்னர்மீண்டும் விமானம் திரும்பி வருமாயின், ஏற்கனவே உங்களால் தயாரிக்கப்பட்ட போலிக் கொட்டில் அல்லது குப்பைக் கூழங்கள், டயர்கள் போன்றவற்றின் குவியல்களை நீங்களாகவே பற்ற வைத்து விடுங்கள். திரும்பி வரும் விமான ஓட்டி, தான் முதலில் குண்டு போட்ட இடங்களில்தான் நெருப்பு பற்றி எரிகிறது என்ற எண்ணத்தில் அவ்விடத்தை விடுத்து வேறிடம் நோக்கிச் செல்வான்

பகலில் நிகழும் குண்டு வீச்சுக்களுக்கு, உங்கள் வீட்டுக் கூரையின் மேல் சிறு தாவரக் கொடிகளை கூரையை மூடும் வண்ணம் கண்டபடி படர விடுவதனால் மேலிருந்து பார்க்கும் போது வீட்டுத்தோட்டம் போன்ற எண்ணத்தை தோற்றுவிக்கும் இதனால் உங்கள் வீடுகளில் உண்டாகும் பாதிப்பு குறையலாம். உங்களது வீடுகளுக்கு அருகில் ஏதேனும் பாழடைந்த அல்லது பயன்படுத்த முடியாத கட்டிடங்கள் இருப்பின் அவற்றினை குண்டு வீச்சினால் தாக்கப்பட்டதைத்போல் இடித்து விடுவதாலோ, அல்லது ஏற்கனவே குண்டு வீச்சினால் தாக்கப்பட்ட கட்டிடம் ஒன்றாயின், அதன் இடிவுற்ற பகுதிகளை அகற்றி சுத்தம் செய்யும் முயற்சியில் ஈடுபடாது அப்படியே விடுவதன்மூலமோ உங்கள்பகுதியில் மேலும் குண்டு வீச்சு நிகழாமல் தடுக்கலாம்.

(முற்றும்)

## இன்றைய பலன்

மாதம் - மாசி.
திகதி 13 (1986 - 2 - 25)
திதி-பிரதமை - மு.இ வரை
நட்சத்திரம் - பூரம் மு.இ வரை

மேடம்- அறவழிகளை மனம் நாடும். வேதனை கொடுத்த சம்பவம் ஒன்று மரசமாகத் தீர்க்கப் படலாம் சுற்று வட்டாரத்தில் மதிப்பு உயரும்

இடபம்- புதுமையான சம்பவங்கள் தலை தூக்கும் தொழில் துறையில் புதியாதனை உருவாகும் கற்றவர் ஆதரவும் உண்டு.

மிதுனம்- உறவு முறைகள் பலப்படும். உற்சாகம் பெருகும் புதிய நண்பர்கள் புடை சூழ்வர். வாழ்த்துமுண்டு.

கடகம்- மோத வரும்பகை மோசடி நடக்கும் அன்னியரின் தலையீட்டால் சஞ்சலம் ஏற்படலாம் துணிவே துணையென இருக்கவும்.

சிங்கம்- குடும்பக் கவலையுடன் குறுக்கு வழித்தலையீடும் புதிர்போடும். வாழ்க்கையில் சோர்வுக்கு இடமுண்டு.

கன்னி- இலட்சியப் பாதையில் வெற்றி நடை போடுவீர்கள். உயர் வட்டத்து அன்பு அவசியம் கிடைக்கும். பதவி உயர்வும் உண்டு.

துலாம்- சகோதர வழியால் சஞ்சலம் உண்டு உள்வீட்டிலேயே பூசல்கள் தோன்றும் உஷாராக இருக்கவும்

விருச்சிகம்- தகுதியில் முன்னேற்றமுண்டு. தரமான வாழ்வு கிட்டும். எதிரிகள் பணிவர் எதிலும் வெற்றியுண்டு.

தனுசு- இனிமையின் அழைப்பு இன்று உங்களை அழைக்கலாம். இல்லம் பல்கலைக் கழகமாகமாறும் களஸ்த்திர வழியாற் கண்ணியம் சேரும்.

மகரம்- வேண்டிய ஒருவரைப் பகைத்துக் கொள்ள நேரிம். அவசரப் போக்கினால் ஆபத்து விளையலாம். சகோதர வழி சஞ்சலமுண்டு.

கும்பம்- இறைவழிபாடு ஏற்படும் இதயத்தில் அமைதியும் ஏற்படும் முதியவர் ஒருவர் தக்க சமயத்தில் உங்களுக்கு உதவ முன்வருவார்.

மீனம்- உற்சாகமாக நாளை ஆரம்பிப்பீர்கள். தொழில் துறையில் முன்னேற்றம் காணப்படும். வெளயிடத்திலிருந்து வரவேற்கத் தக்க செய்தியும் கிடைக்கும்.

திருமலை
வே. ரவீந்திரன்

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான மன்ற அபிவிருத்திக் கண்காட்சி;

## நம்பிக்கையூட்டுகின்ற நல்லதோர் முயற்சி!

சமூக பொருளாதார அமைப்பை- எமது மூலவளங்களைக்கொண்டு எப்படிகட்டி எழுப்பப்போகிறோம்என்றுநீங்கள் கிலேசப்படாதீர்கள்!

நிச்சயமாக அந்த சமூக-பொருளாதார அமைப்பை எங்கள் கண்முன்னாலேயே-நிதர்சனமாகவடிவில் செயற்பாடுமூலம் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள் யாழ்.பல்கலைக் கழகவிஞ்ஞான மன்ற மாணவர்கள்.

இன்றும் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரியில் யாழ் பல்கலைக்கழக இயற்கை விஞ்ஞான மன்றம் நடாத்தும் அபிவிருத்திக் கண்காட்சி நடைபெறுகிறது.

எமது பிரதேசத்தின் சமூக-பொருளாதார அமைப்பை அப்படியே ஆய்வு ரீதியாக-எமது நடைமுறைக்கேற்ப செய்து காட்டுகிறார்கள் 'அந்தப் புத்திஜீவிகள் இலங்கையின் வரைபடத்தில் (வடக்கு-கிழக்கு- மலையகம்] 'உள் வலயப் பொருளாதாரம்' என்று எல்லை போட்டு அங்கு மேற்கொள்ளக்கூடிய பலவித பொருளாதார முயற்சிகளை விபரமாக விளக்குகிறார்கள்.

குடிசனப் பரம்பல், நிலப் பரம்பலும் பயன்பாடும், மண் நீர்வளங்களும் பயன்பாடும், விவசாயம், மீன்பிடித்துறை கால்நடைவிருத்தி, கைத்தொழில் வலுவளங்கள், பொதுத் தொடர்புச் சாதனங்கள்.உல்லாசப் பயணத்துறை வைத்தியத்துறை, பனைவளம், இலத்திரனியல் ஆகிய பதின்மூன்று அம்சங்களும் இக்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இந்த அம்சங்கள் முற்று முழுதாகப் பரிணமித்துசெயல்படத்தொடங்கினால் நாம் பிறர்கையை எதிர் பார்க்க வேண்டிய நிலை எந்தவொரு கட்டத்திலும் நிச்சயமிருக்காது.

உதாரணமாகப் பனை வளத்தை அக்கண்காட்சியில்உற்று நோக்குவோமானால் எங்கள் பொருளாதாரத்துக் கேற்ற அத்தனை சிறப்பம்சங்களும் இலகுவாக- எளிமையாகப் புரிந்துகொள்ளலாம்.

இப்படியே கோதுமைமாவைக்கூட நாம் நம்பியிருக்கத் தேவையில்லை. புரதச் சத்துள்ள அரிசி, குரக்கன், மரவள்ளி ஒடியல் போன்றவை இருக்கவே இருக்கிறதென்கிறார்- கண்காட்சி அமைப்பாளர்களில் ஒருவர்.

வைத்தியத் துறையில் ஆயுர்வேதம் மட்டுமல்ல ஆங்கில வைத்திய முறையில்ஒரு உண்மையான இறந்த மனிதனின் உடலையே அங்கு அப்படியே நலுங்காமல் வைத்து விளக்கமளிக்கிறார்களே!

இவை எல்லாவற்றையும் விட ''நாம் ஈழவர், நமது மொழி தமிழ்; நம் நாடு ஈழம்'' என்று எழுதப்பட்ட

[7-ம் பக்கம் பார்க்க]

## அகதிகளுக்கு உதவி

[கொழும்பு]

திருகோணமலை- திரியாய் அகதிகளுக்கு சுமார் இருபத்தையாயிரம் ரூபா பெறுமதியானப் பொருட்களை இந்து இளைஞர் பேரவை அன்பளிப்புச் செய்துள்ளது. (ய-பி)

பிரயாண ஒழுங்கு

★ ஜேர்மனி ★ பிரான்ஸ்
★ இத்தாலி

ஆகிய நாடுகளுக்கான
உடனடிப் பிரயாணம்

பங்குனி 3-ம் திகதி எமது முகவர் உங்களை அழைத்துச் செல்வார்.

கனடா போவதற்கான உடனடி பிரயாண ஒழுங்குகளும் செய்துதரப்படும். மத்திய கிழக்கு நாடுகளில் ஆண், பெண் இருபாலாருக்குமான வருமானத்திற்கான ஒழுங்குகளும் உடனடியாக செய்து தரப்படும்.

அத்துடன் வெளிநாட்டு டிக்கட்டுகள், பாஸ்போட் பொன்ட் [BOND] முதலியனவும் துரிதகதியில் செய்துதரப்படும்.

GROUP ATLANTIC TRAVELS
(சிங்கள மகாவித்தியாலயம் முன்பாக)
163, Hospital Road, Jaffna.
A-292

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பின்னுறுதிக்கட்டளை அறிவித்தல்

சாவகச்சேரி

மாவட்ட நீதிமன்றம்

சாவகச்சேரி என்னுமிடத்தைச்சேர்ந்த காலஞ்சென்ற செல்வி நவீனு பொன்னே கனகதுங்கத்தினது மரண சாதனமற்ற சொத்துக்களின் விடயத்தில்:

— மரணமெய்தியவர்.

1. திருமதி அருந்ததி கிருபாகரன்
2. முத்தையா கிருபாகரன் இருவரும் இல. 54, 4ம் குறுகுத் தெரு, யாழ்ப்பாணம் தற்போது, கண்டிவீதி, சாவகச்சேரி.

— மனுதாரர்கள்

வழக்கு இல: 228/ரீ

எதிராக

1. செல்வி விமலா கனகதுங்கம், இல. 54, 4ம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம், தற்போது கண்டி வீதி, சாவகச்சேரி.
2. சந்திரன் உவாற்சன் பொன்னே கனகதுங்கம் இல. 54,4ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். தற்போது டுபாய். தனது அற்றோனியராகிய 1ம் எதிர்மனுதார் செல்வி விமலா கனகதுங்கம் மூலம்:

— எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணச்சொத்து வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச் சொத்தை நிருவகிப்பதற்காக மேற்சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் கொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986ம் ஆண்டு மாசிமாதம் 12ம் திகதி முற்பகல் 9-00 மணிக்கு இந் நீதிமன்றத்தில் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாது என்பதற்காகக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

1986ம் ஆண்டு தை மாதம் 30ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி

ஆ. குணநாயகம்
பதிவாளர்

தயாரித்தவர்கள்:

பரராஜசிங்கமும்
அம்பிகைபாலனும்
மனுதாரின் சட்டத்தரணிகள்

மறுதவணை 19-3-86.

ஆ. குணநாயகம்
பதிவாளர்
13-2-86

C 928

## அரவம் தீண்டி மரணம்

[யாழ்ப்பாணம்]

அரவம் தீண்டிய ஒரு பெண் தனியார் சிகிச்சை நிலையத்தில் 10 நாட்கள் சிகிச்சை பெற்ற போது நிலைமை மோசமடைந்ததைத் தொடர்ந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமானார்.

பூநகரியைச் சேர்ந்த செல்வரத்தினம் பெண் பராசக்தியின் [30 வயது] மரணவிசாரணையில் இத்தகவல் தெரியவந்தது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினர்.

வயலில் அறுவடை செய்யும் போது புடயன் பாம்பு ஒன்று கொத்தியதாகவும் உடன் தனியார் டாக்டரிடம் சிகிச்சை பெற்று 10 நாட்களின் பின்னர் பூநகரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுமறுதினம் யாழ் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு அங்கு மரணமானாரெனத்தெரிவிக்கப்பட்டது. விசாரணை முடிவில் விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

(க)

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற விஜயரத்தினம் விஜயகுமார் என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயமாக.

மரணமெய்தியவர்

விஜயரத்தினம் சைம் பெண் இராசபாக்கியம், அராலி கிழக்கு, வட்டுக்கோட்டை. தற்போது 166 முதலாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

மனுதார்

மரணசாதன நியாயாதிக்கம் } இல. 3941

மேலேயுள்ள இலக்கங்கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிட்ட இறந்து போனவரின் மரணச்சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1986-ம் ஆண்டு பங்குனி மாதம் 14-ம் நாளன்று முற்பகல் 9-30 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன்முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி

கு. குலசிங்கம்

7-01-1986 பதிவாளர்

வரைவு;

இ. சிவசுப்பிரமணியம்,
செ. மகேசன்,
மனுதாரின் சட்டத்தரணிகள்

(C 936)

## லொறி கிடைத்தது

[யாழ்ப்பாணம்]

மூளாய்க்கும் பொன்னாலைக்குமிடையே எழுபத்தியேழு மூடை அரிசியுடன் இனம் தெரியாதவர்களால் கடத்திச் செல்லப்பட்ட லொறி அராலிப் பாலத்தில் அனாதரவான நிலையில் கைவிடப்பட்டிருந்தது. உரிமையாளர்கள் வந்து லொறியை எடுத்துச் சென்றுள்ளார்கள்.

(ஐ)

## நிர்வாகக்கூட்டம்

[வேலணை]

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் நிர்வாகக் குழுக்கூட்டம் அடுத்தமாதம் 02ம் திகதி ஞாயிற்றுக்கிழமை நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் தலைவர் அ. தி. சண்முகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கின்றது.

## "புற்று நோய்"

(யாழ்ப்பாணம்)

புற்றுநோய் என்ற தலைப்பில் வடமாகாண புற்று நோய்ச்சங்கம் சிறு கைநூலை வெளியிட்டுள்ளது.

ரூபா 3-00 விலை குறிக்கப்பட்ட இந் நூலில் "புற்றுநோய் என்றால்என்ன" "புற்றுநோய் தோற்றத்தில் ஈடுபடும் காரணிகள்" போன்ற தலைப்புகளில் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

புற்றுநோய் இன்று சமுதாயத்தின் பல மட்டங்களிலும் காணப்படும் ஒரு நோய் என்ற முறையில் அதுபற்றி சகலரும் அறிந்திருப்பதும், அது உண்டாகும் காரணிகளையும், தவிர்க்கும் மார்க்கங்களையும் புரிந்துவைத்திருப்பதும் அவசியம். அதற்கு இந் நூல் பெரிதும் உதவிபுரியும். [பெ


## யாழ் பல்கலைக்...

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை வரைபடத்தில் 'உழவு கலப்பை' சின்னமும் பொறிக்கப்பட்டிருந்தது இவையெல்லாம் பருத்தி நூல்களால் பின்னப்பட்டுள்ளமை குறிப்பிடப்பட்டுள்ளது.

மாணவர்களுக்கும் வருங்கால சந்ததியினர்க்கும் எமது பிரதேசத்தின் சமூக பொருளாதார அபிவிருத்திக் கண்காட்சி ஒரு வரப்பிரசாதம். ஒருமுறை பரியோவான் கல்லூரிக்குச் சென்று பாருங்களேன்.

-- ஏ. வி. மாணிக்கம்




## "ஒன்றுபட்டு குரல் எழுப்பி உரிமை பெறுவோம்"

(யாழ்ப்பாணம்)

"தமிழ்பேசும் மக்கள் ஒன்றுபட்டு அரசாங்கத்தை எதிர்த்துக் குரல் எழுப்பி வெற்றி காண்பதொன்றே; தமிழினத்தின் கடைசிக் கட்டமாக மாறி வருகின்றது.

இவ்வாறு, அகில இலங்கை ஐக்கிய சுருட்டுத் தொழிலாளர் சங்கக்கூட்டத்துக்குத் தலைமை வகித்துப்பேசுகையில் திரு ஆ துரைராஜசிங்கம் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது"

"அரசாங்கம் தரையாலும், கடலாலும், கொடுமையான ஆகாயத் தாக்குதலாலும் நாளுக்குநாள் தமிழ் மக்களைக் கொன்று பிணக்குவியல்களை உண்டுபண்ணி வருகிறது இக்காட்சிகள் உயிருடன் இருக்கும் தமிழர்களை உயிருடன் கொன்று விடுவதற்குச் சமனாகும்.

"அநாகரீகமான ஆகாயத் தாக்குதல்களால் பிணக்குவியல்களை ஏற்படுத்திவிடுவதன் மூலம் பிரச்னைக்குத் தீர்வு காணமுடியுமா?

"பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்தி தமிழினத்தைமுற்றாக அழித்துவிடுவதுதான் அரசாங்கத்தின் நோக்கமானால் தமிழன் உயிர் வாழ்வது எங்கே?

"குடியேற்றத் திட்டங்களில் ஏழை விவசாய மக்களைச் கொன்று குவிப்பது, உயிருடன் பொசுக்கிச் சாம்பலாக்குவது போன்ற காட்டுமிராண்டித்தன செயல்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்

ஆகவே இம்மாதம் 27ந் திகதி நடைபெறவுள்ள வெகுஜன ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில் எமது சங்கம் உற்சாகத்துடன் பங்குகொள்ள முடிவு செய்துள்ளது" என்றார்.

(ஐ)

## அரச...

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

இதன் எதிரொலியாக அநுராதபுரத்துக்குவரும் வாகனங்கள் பாதுகாப்புக்கருதி பலத்த சோதனைக் குட்படுத்தப்பட்டுள்ளன.

(ய-பி)

## தமிழ் நாட்டில் பிறந்து யாழ்ப்பாணத்துக்கு பணியாற்றினர்

சென்னையில் பிரபல குடும்பத்தில் பிறந்து, அங்கே கல்வி கற்று எம். ஏ பட்டம் பெற்ற திரு ரி. கே. ராஜசேகரம் சென்னை கிறித்தவக் கல்லூரியில் கணித விரிவுரையாளராகக் கடமையாற்றினர்,

அதன் பின்னர் தமது பதவியைத் துறந்து யாழ்ப்பாணம் வந்து, பரயேஸ் ராக் கல்லூரியின் உப அதிபராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றார்.

இவரது குடும்பம் யாழ்ப்பாணத்திலும்தொடர்புடையது. தெல்லிப்பழையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்ந்த திரு ராஜசேகரம் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தார், தெல்லிப்பழைப நோ கூ. சங்கத்தின் நிர்வாகத்தில் இவரது பங்கு அளப்பரியது

சாந்தப் போக்கும் இனிமையான சுபாவமும் கொண்ட இவர் மக்களுக்கு எழும் சிக்கலான பிரச்னைகளையெல்லாம் இலகுவாகத் தீர்த்து வைத்தார்

வட மாகாண ஆசிரிய சங்கத் தலைவராகவும், நிர்வாக அங்கத்தவராகவும் பல்லாண்டு அருஞ்சேவை செய்து ஆசிரிய உலகிற்கு பெரும் பணியாற்றினர்

இறுதியாக ஓய்வு பெற்ற காலத்தில் தமது பிள்ளைகளுடன் அமெரிக்காவில் ...ழிசது, கடந்த மாசம் 12ம் திகதி காலமானர்.

ஓர் அன்பன்.

## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி


திதி: 25-02-1986



முத்தையா கணேசலிங்கம்

அன்னையின் மடியில்: 29-08-1964

அரக்கனின் அழிப்பில்: 22-01-1985



ஆறுமுகம முத்தையா

அன்னையின் மடியில்: 25-07-1933

மைந்தனின் பிரிவால் தன்னையே அழித்தது: 07-03-1985

நினைவெல்லாம் நீக்கமற நிறைந்துவிட்ட எங்கள் அன்புத் திருவுருவங்களே நாளெல்லாம் எங்கள் நலன் நினைத்து உழைத்த உயிருக்குயிரானவர்களே, பாசம் என்ற சொல்லுக்கே இலக்கியமாய் வாழ்ந்த எங்கள் ஆருயிர்த் தெய்வங்களே, நீங்கள் எங்கள் கண்ணிலிருந்துதான் மறைந்துவிட்டீர்கள் உங்கள் கனவுகளை நனவாக்க உயிர்வாழும் எங்கள் இதயங்களிலிருந்து உங்களை யாரால் பிரிக்கமுடியும்? உங்கள் ஆத்மசாந்திக்காக நாளெல்லாம் பிரார்த்திக்கும்:

அன்புக் குடும்பத்தினரும்,
உறவினர்களும்.

இயக்கச்சி.

C-913

## "வாழ்க்கையை வளமாக்க கால்நடை வளர்ப்பு உதவும்"

[புலோலி]

"கிராமிய மக்கள் கால்நடை வளர்ப்புக்களில் ஈடுபடுவதனால் தமது வாழ்க்கையை வளம்படுத்திக்கொள்ள முடிவதுடன், கிராமிய அபிவிருத்தியையும் மேம் படுத்த முடியும் கிராமியப் பகுதிகளில் கால்நடை வளர்ப்புக்களை ஊக்குவிப்பதற்கென வழங்கப்படும். சகல உதவிகளையும் கிராமிய மக்கள் முழுமையாகப்பயன்படுத்த வேண்டும்."

இவ்வாறு பருத்தித்துறை வராத்துப்பளைக் கிராமத்தில் நடைபெற்ற "கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி" பற்றிய கூட்டத்தில் உரையாற்றிப பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரி டாக்டர் கே. தங்கராஜா கூறினர்.

தொடர்ந்து அவர் தமதுரையில்; இன்றைய பொருளாதாரச் சிக்கல்கள் நிறைந்த காலகட்டத்திலே ஒவ்வொருவரும் வீட்டுத்தோட்டம்,கால்நடை வளர்ப்பு சிறுகைத் தொழில் முயற்சிகளில் ஈடுபடவேண்டியது மிக முக்கியமானது. வடமராட்சிப் பகுதியில் கால்நடை வளர்ப்பை ஊக்குவிப்பதற்கு வேண்டிய உதவிகளை பருத்தித்துறை கால்நடை வைத்திய அதிகாரப் பணிமனை வழங்கிவருகின்றது. கால்நடை வளர்ப்பு ஊக்குவிப்பு நடவடிக்கைகளில் வடமராட்சி கால்நடை வளர்ப்போர் சங்கமும் முன்நின்று உழைத்து வருகின்றது. கால்நடைவளர்ப்போர் கால்நடைகளை நல்லமுறையில் பராமரிப்பதுடன் கால்நடைகளுக்கான நோய்த்தடுப்பு நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்என்றார்

அதைத்தொடர்ந்து கால்நடை ஆய்வு உத்தியோகத்தர் கே. கிருஷ்ணபிள்ளை உரையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
THE EELANADU
NATIONAL TAMIL DAILY

# வெகுஜன அமைப்புகளின் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

## ஊர்திகளின் பவனியும் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

அண்ணா திராவிடமுன்னேற்றக் கழகமும் பதினைந்து வெகுஜன அமைப்புக்களும் இணைந்து நடாத்தும் ஆர்ப்பாட்ட ஊர்வலம், இம்மாதம் 27ம் திகதி திட்டமிட்டபடி நடத்தப்படும் என்று இணைப்புக்களின் அமைப்பாளர் திரு. பொன் மதிமுகராசா நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இணைப்பு அமைப்புக்களின் தலைவர் திரு ஆ. துரைராஜசிங்கம் உட்படசகல வெகுஜன அமைப்புக்களின் பிரதிநிதிகளும் மாநாட்டில் கலந்து கொண்டனர் இம் மாநாட்டில் உத்தேச ஆர்ப்பாட்ட ஊர்வலம் சம்பந்தமாக இதன் அமைப்பாளர் திரு பொன். மதிமுகராசா மேலும் கூறியதாவது:

''பாராளுமன்றத்திலும் வர்த்தமானி மூலமும் முறையாகத் தெரிவிக்கப்படாமல் பாதுகாப்பு வலயப்பிரகடனம் செய்த ஒரேநாடு உலகிலேயே இலங்கைதான். இதனைத் தமிழ்மக்கள் எதிர்த்தனர். ஊர்வலம் நடத்தினர். ஆனால் இதனையும் மீறி 16ம் மைல் கடல் வலயம் பிரகடனப்படுத்தப்பட்டு தமிழ் மீனவர்களைப் பழிவாங்கியது அரசு இதைவிட மேலும் பயங்கரமானது விமானம் மூலம் மக்கள் மத்தியில் குண்டுகளைப்பொழிந்து அவர்களை அழிப்பது! 102 பேரை எரித்தது மேலும் அதி பயங்கரமானது! இப்படியே சிறிலங்கா அரசின் போக்கு எப்படிச் செல்லும் என்று நாம் கூறமுடியாதுள்ளது. எனவே இவ் வேளையில் வெகுஜனப் போராட்டங்கள் நடத்துவது தவிர்க்க முடியாதது. சகல தமிழ் மக்களையும்இணைத்து ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை திட்டமிட்டபடி இம்மாதம் 27ம் திகதி நடத்துவோம்.

''ஆர்ப்பாட்ட ஊர்வலத்தன்று சகல வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டிருக்கும். சந்தைகள் கூடமாட்டாது. மதுசாலைகள் மூடப்பட்டிருக்கும். மினித் தியேட்டர்களில் காட்சிகள் இருக்காது. அரசாங்க ஊழியர்கள். உள்ளூராட்சி ஊழியர்கள்கறுப்புப்பட்டி அணிந்து காரியாலயங்களுக்குச் செல்லவேண்டும். பாடசாலை ஆசிரியர்கள் மாணவர்கள் கறுப்புப் பட்டி அணிந்து பாடசாலைக்குச் செல்ல வேண்டும் ஆயினும் பாடசாலை மாணவர்கள் காலை பத்துமணியுடன் வகுப்புக்களைப் பகிஷ்கரித்துக்கொண்டு ஊர்வலத்தில் பங்குகொள்ள வேண்டும். தொழிலாளர்கள் கடமைக்கு செல்லாது ஊர்வலத்தில் கலந்து கொள்ளவேண்டும். தனியார் கல்வி நிறுவனங்கள் இயங்க மாட்டாது. பொது மக்கள் நலன்கருதி மினி பஸ் சேவைகள் நடைபெறும். ஆர்ப்பாட்ட ஊர்வலத்தில்எமது அமைப்பை ஏற்றுச் சகலரும் கலந்துகொள்ளும்படி வேண்டுகிறேன். ஆர்ப்பாட்ட ஊர்வலம் யாழ். சிவன்கோவில் சந்தியில் ஆரம்பமாகி யாழ் கச்சேரியை அடைந்து பின்னர் நல்லூர் கோவிலை அடைவதுடன் முடிவடையும். ஊர்வலத்தில் 1983ம் ஆண்டு நிகழ்ச்சிகளைச் சித்தரிக்கும் ஊர்திகளும் இடம்பெறும்.'' (ஐ)

காதலித்துத் திருமணம்செய்த

# நிறைமாதக் கர்ப்பிணியின் மரணத்தில் சந்தேகம்!

## மரணவிசாரணை ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நிறைமாதச் கர்ப்பிணிப் பெண் ஒருவரின் மரணவிசாரணையின்போது அவரது உறவினர் சந்தேகம் தெரிவித்ததைத் தொடர்ந்து மரண விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது

இணுவிலைச் சேர்ந்த சி.விமல மகாதேவியின் (28 வயது) மரண விசாரணையின்போது இத்தகவல் தெரியவந்தது

யாழ். மரண விசாரணை அதிகாரி க. கேசவன் மரண விசாரணை நடத்தினுர்.

இறந்தவர் 2 வருடங்களுக்கு முன்னர் காதலித்துத் திருமணம் செய்தாரென்றும், கணவர் தினமும் மது அருந்திவிட்டு வீட்டுக்கு வருவதால் சச்சரவு ஏற்படுவதாகவும், 5ம் தேதி உரம் வாங்கிவரச்சென்ற கணவர் மது அருந்திவிட்டு வந்ததாகவும், ''ஏன் குடித்துவிட்டு வாறீர்கள்?'' என்று மனைவி கேட்க, ''நான் குடித்தால் உனக்கென்ன?'' என்று கணவர் பதிலளித்ததாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

கணவர் உடனே தோட்டத்திலிருந்த நச்சுத்திராவகத்தை எடுத்துவந்து மனைவியைப் பயமுறுத்துவதற்காக மூடியைத் திறந்து, ''குடிக்கப்போகின்றேன்'' என்று கூற, உடனே மனைவி அப்போத்தலைப் பறித்துக் குடித்ததாகவும் மரண விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அவர் அங்கு மரணமானுரென்று இறந்தவரின் கணவனும், கணவரின் உறவினரான யோகமித்திரனும் தெரிவித்தனர்.

உறவினரான க பன்னிருகரன் சாட்சியமளிக்கையில், இறந்தவர் காதலித்துத் திருமணம்செய்தவரென்றும், ஒரு வருடமாக யாழ்ப்பாணத்தில் வீடெடுத்து வசித்துவந்தபின். கணவன் வீட்டில் வசித்துவந்தார் என்றும், அப்போது அவ் வீட்டில் எந்நாளும் பேச்சு வாங்க முடியாததினுல் தனிக் குடித்தனம்போக இறந்தவர் விரும்பியதாகவும், அதற்குச் சொத்துக்களைப் பெறமுடியாதென்று கூறிய கணவன் காலங்கடத்தித்துவந்ததாசவும் தெரிவித்தார்.

இறந்தவர் கணவன் வீட்டில் பிரசவம்பார்க்க வசதியில்லாததினுல் தன் வீட்டில் வந்திருக்க விரும்பியதாகவும், அதற்கான ஏற்பாட்டைச் செய்ததாகவும், 15ம் திகதி அவர் இறந்துவிட்டதாக அறிந்ததாகவும், அவர் மரணத்தில் சந்தேகம்கொள்வதாகவும்பன்னிருகரன்தெரிவித்தார்.

டாக்டர் சிவகணேசமூர்த்தி சாட்சியமளிக்கையில், சம்பவதினம் பிற்பகல் 3 மணியளவில் இறந்தவர் வீட்டுப் பக்கத்தால் தான் வந்ததாகவும், இறந்தவரின் கணவர் தன்னைச் சந்தித்துக் கதைத்ததாகவும், எதுவும் கூறவில்லை என்றும் சொன்னுர்.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [க]

# மரண அறிவித்தல்

### எஸ். எம். அப்புத்துரை

கந்தரோடையைச் சேர்ந்த முன்னைநாள் 'இந்து போர்ட்' கணக்காளரும், தமிழ்க் கந்தையா வித்தியாசாலை முகாமையாளருமான எஸ். எம். அப்புத்துரை காலமானுர். இவர் சேதுநாயகியின் அன்புக் கணவரும், தற்பரானந்தன் (அதிபர்), நித்தியானந்தன் (நில அளவையாளர்), சர்வானந்தன் (சீமெந்துத் தொழிற்சாலை, காங்கேசன்துறை), குலகுணேஸ்வரி, குலகுணராணி, குலகுணசக்தி, தேவானந்தன் (ரஷ்யா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கந்தையா (யாழ்.நூல் நிலையம்), நகுலாம்பிகை (ஆசிரியை) ஆகியோரின் மாமனுரும், குமுதினி, ஜபாலினி ஆகியோரின் பேரனுமாவார். அன்னுரின் ஈமக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

[C 949]

### திருமதி தெய்வானைப்பிள்ளை செல்வத்துரை

(இறுதி அஞ்சலியும், ஆன்மீகப் பிரார்த்தனையும்)

அளவெட்டியைச் சேர்ந்த திருமதி தெய்வானைப்பிள்ளை செல்வத்துரை இம்மாதம் 21-ந் திகதி வெள்ளிக்கிழமை இங்கிலாந்தில் அமரத்துவம் அடைந்தார். இவர் முன்னைநாள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி ஆசிரியையும், திரு M. செல்வத்துரை (ஓய்வு பெற்ற சுகாதார வைத்திய அலுவலர்) அவர்களின் துணைவியாரும், செல்வநேசன் அதிபர் கிறவுண் குறூப்), செல்வரஞ்சி (U.K.), செல்வச்செந்தி (U K.), செல்வரமணி (U.K ), செல்வதிலகன் (கனடா), செல்வதாரணி, செல்வராகினி (U.K.) ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகபூஷணி, பரஞ்சோதி U.K.). கணேசன் (U K.), சிறீஸ்கந்தராஜா (U.K.), சுவீந்திரகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், கல்பனு (U.K ). வஜீரா (U K.), அர்ஜுனு, துர்க்ஷி ஆகியோரின் ஆசைப் பேத்தியுமாவார். அன்னுரின் தகனக்கிரியைகள் இங்கிலாந்தில் நடைபெறும் தினமான 26-2-86 புதன்கிழமை அன்னுரின் ஆத்ம சாந்திக்காக அன்று காலை அவரது அளவெட்டி இல்லத்தில் நடைபெறும் இறுதி அஞ்சலியிலும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையுலும் கலந்துகொள்ளுமாறு உற்ருர், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்ருேம்.

திரு. திருமதி செல்வநேசன்

''கொலிஜ் வியூ'',
அளவெட்டி தெற்கு.

[C 918]

# ''கடத்திய வாகனத்தை திருப்பித் தாருங்கள்''

## மன்னுர் அரச அதிபர் கோருகிருர்

(மன்னுர்)

'தங்களிடமிருந்த தனியார் வாகனத்தைக், கடத்திச்சென்றவர்கள் மனிதாபிமானரீதியில் திரும்பவும் ஒப்படைக்குமாறு மன்னுர் அரசாங்க அதிபர் ஜனுப் எம். எம். மச்லூல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தனியாருக்குச் சொந்தமான வாகனமொன்றில் மன்னுர்-பண்டாரிவெளிப் பகுதியில் உள்ள அகத்திமுறிப்புக் கிராமத்துக்கு மன்னுர் அரசாங்க அதிபர் தலைமையிலான உத்தியோகத்தர் குழு விஜயம்செய்திருந்தது. அககிரமத்திலுள்ள மக்களின் குறை-நிறைகளை அவ்வதிகாரிகள் குழு கேட்டறிந்துவிட்டு மன்னுர் செயலகம் திரும்பிக்கொண்டிருந்தனர். அச்சமயத்தில் அருவியாறு என்னுமிடத்தில் வைத்து ஆயுதம்தாங்கிய இனந்தெரியாத நபர்கள் அவ் வாகனத்தை தடுத்துநிறுத்தி, அரசாங்க அதிபர் உட்பட அதிலிருந்த அதிகாரிகளை இறக்கிவிட்டு வாகனத்தைக் கடத்திச்சென்றுவிட்டனர்.

இல்வாருன செயல்கள் மக்களின் தேவைகளைப்பூர்த்தி செய்வதில் மிகுந்த சிரமத்தை அளிக்கிறது. அத்துடன் கடத்தப்பட்ட வாகனம் தனியார் ஒருவருக்குச் சொந்தமானது.

அவ்வாகனத்தைக் கடத்திச் சென்றவர்கள் மனிதாபிமானரீதியில் மீண்டும் ஒப்படைக்குமாறு மன்னுர் அரசாங்க அதிபர் கேட்டுடுள்ளார் (மா)

## படுகொலைச் சம்பவம்

[கொழும்பு]

கடந்த வாரம் அக்கரைப்பற்றிலுள்ள லகுகலவில் நடைபெற்ற படுகொலைச் சம்பவங்கள் குறித்த விபர அறிக்கை ஜெனீவாவிலுள்ள சர்வதேசமனித உரிமைகள் இயக்கத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இவ்வறிக்கை லண்டனிலுள்ள 'அம்னஸ்டி இன்டர்நேஷனல்எனப்படும் சர்வதேச மன்னிப்புச் சபைக்கும், ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்திற்கும் அனுப்பப்படுமெனவும் அறியப்படுகிறது. [ய-செ]

# அகதிகளுக்குதாராளமாக உதவுமாறு கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

வன்முறைச் சம்பவங்களால் உடைமைகளை இழந்து அகதிகளாக அல்லல்படுவோருக்குத் தாராளமாக நிவாரண உதவி வழங்கும்படி கோரி 'ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி' வர்த்தகர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இன்று தொடக்கம் நாளை மறுநாள் 27ம் திகதி வரை தமது தோழர்கள் நிவாரண உதவி பெறுவதில் ஈடுபடுவார்கள் என்றும், கையொப்பமிடப்பட்ட 'போட்டோஸ்ரற்' பிரதிகளைக் காண்பிக்குமாறும் நிவாரணஉதவிவழங்குமிடத்து 'ஈ. பி. ஆர். எல். எவ்' விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

''அகதி முகாம்களுக்கு அரசு உதவிகளை நிறுத்தி எமது மக்களை பசிப் பிணியிலும், நோய் நொடியிலும் சாகடிக்கின்றது. குறிப்பாக திருமலை மாவட்டத்தின் அகதி முகாம்களில் மக்கள் இலை,குழைகளை உண்ண வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். ஏனைய மாவட்டங்களிலும் அகதிகளாக்கப்பட்டமக்களின் நிலை மிகமோசமடைந்துள்ளது. இந்நிலைமையில் தங்களாலான பங்களிப்பைச் செலுத்துமாறு பணிவன்புடன் வேண்டுகின்ருேம். உணவுப் பொருட்களையும் ஆடை வகைகளையும் பெருமளவில் தந்துதவுமாறு வேண்டுகின்ருேம். [மா]

### மரண அறிவித்தல்

பெரியதம்பி பொன்னம்பலம்

நீர்வேலி தெற்கு பெரியதம்பி பொன்னம்பலம் 24 02 1986 ல் காலமானுர் இவர் அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், கதிரவேலு திலசவதி சீவரத்தினம் சிவபாக்கியம், சுப்பிரமணியம் இராசம்மாவின் அன்புத் தந்தையுமாவார் அன்னுரது ஈமக்கிரியைகள் 25-02-1986 செவ்வாய்க் கிழமை பி.ப 4 மணிக்கு நீர்வேலி மயானத்தில் நடைபெறும்.

[C- 950] செ. சீவரத்தினம்

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்க அச்சகத்தில் 1986-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B 1003/81 Eelanadu P. O. Box 49, Telegram. Eelanadu, Telephone. 2238

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org